E Paper

மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 பெப்ரவரி 25 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 48 | Saturday 25, February, 2023 | 11 பக்கங்கள்

## நீர் கட்டணம் செலுத்தாததால் ரூ. 8,400 மில்லியன் நிலுவை



நீர் கட்டணம் செலுத்துவது 40% குறைவடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. 8,400 மில்லியன் ரூபா நிலுவை கட்டணத்தை நுகர்வோரிடமிருந்து அறவிட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 6,200 மில்லியன் ரூபா


06

இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையே

## பாதுகாப்பு உறவை பலப்படுத்த இரு நாடுகளும் இணக்கம்

### பாதுகாப்பு செயலாளர்கள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே பாதுகாப்பு உறவை பலப்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே 07ஆவது வருடாந்த பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை புதுடில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

இக்கூட்டத்துக்கு பாதுகாப்புத்துறை செயலாளர் கிரிதர் அரமானே, இலங்கை பாதுகாப்புத் துறை செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண ஆகியோர் தலைமை வகித்தனர்.

இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கூட்டுப் பயிற்சியின் போது,

06

## அமைச்சராக, நகர சபை முதல்வராக அளப்பரிய சேவை செய்தவர் பாயிஸ்

### அனுதாபப் பிரேரணையில் பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**





பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர் அப்துல் பாயிஸ்.

பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக நகர சபை முதல்வராக தமது மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் அளப்பரிய சேவை செய்தவர் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அப்துல் பாயிஸ் கமால்டீன், ரொஹான் அபேகுணசேகர,

06

## வருடம் முழுவதும் சுற்றுலாத் தளமாக நாட்டை மாற்றியமைக்க நடவடிக்கை

### ஜனாதிபதி ஹிக்கடுவையில் தெரிவிப்பு



20 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதே இலக்கு

வருடம் முழுவதுமான சுற்றுலாத் தளமாக இலங்கையை மாற்றியமைத்து, சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள

06

கல்வி அமைச்சுக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டு

# வசந்த முதலிகே உட்பட 62 பேருக்கு விளக்கமறியல்

### பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உட்பட 08 குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு



கல்வி அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட 08 குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே உட்பட 62 பிக்குகள் மற்றும் மாணவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கடுவெல பதில் நீதவான் சுஜீவ குணதிலக்க நேற்று (24) உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் நேற்று (24) கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டதையடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட பௌத்த பிக்குகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கல்வி அமைச்சின் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், அமைச்சுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தல், கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவித்தல், பொதுமக்களை அச்சுறுத்தல் மற்றும் சதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

06

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 09 இல் நடத்துவதில்லை

### தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவிப்பு

#### புதிய திகதி மார்ச் 03 இல் தீர்மானம்




உள்ளூராட்சித் தேர்தலை மார்ச் 09 ஆம் திகதி நடத்துவதில்லையென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் திகதி தொடர்பில் எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி புதிய திகதி தொடர்பான அறிவிப்பு வெளியாகுமெனவும், தேர்தல்

06

ஹிமாச்சல், உத்தரகாண்ட் மாநிலங்களில்

## 8 ரிச்டர் அளவில் அடுத்த வாரம் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம்

### கொழும்பு நகர் பாதிக்கும் வாய்ப்பும் அதிகம்



இந்தியாவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டால் அது கொழும்பு நகரை பாதிக்கும் வாய்ப்புகள் அதிகமென, புவியியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஹிமாச்சல் – உத்தரகாண்ட் மாநிலங்களில் அடுத்த வாரத்தில் 8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாக, இந்திய புவிச்சரிதவியல் ஆய்வு நிலையம் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் 8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அது கொழும்பு நகரை நிச்சயம் பாதிக்குமென்று கூறிய பேராசிரியர், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ஹிமாச்சல் பகுதிக்கு அருகில் 5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டு கொழும்பில் கட்டடங்கள் அதிர்ந்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வளவு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டால் இந்தியாவில் நூற்றில் இருந்து நூற்றி ஐம்பது ஆண்டுகள் பழமையான கட்டடங்கள்

06

இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்பு

## போலி விண்ணப்பங்கள் வழங்கி இளைஞர்களிடம் பண மோசடி

### இரண்டு சந்தேக நபர்கள் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பூரண அனுமதியுடன் இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதாக மோசடி செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்க இலச்சினை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இலச்சினையைப் பயன்படுத்தி, போலியான விண்ணப்பங்களை வழங்கி, இளைஞர்களை ஏமாற்றிய நபர் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்நபர், பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஒருவரிடமிருந்து

06

## அரசாங்க நிதிக்குழு தலைவர் நியமனம் 100 வீதம் சட்டப்படியே இடம்பெற்றது

### இராஜாங்க அமைச்சர் அனுர பெஸ்குவல் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழு தலைவர் நியமனம் நூற்றுக்கு நூறு சட்டப்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதில் எவ்வித தர்க்கத்துக்கும் இடமில்லை என்றும், இராஜாங்க அமைச்சர் அனுர பெஸ்குவல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவே, எதிர்க்கட்சியிலிருந்து அதற்கான தலைவரை தெரிவு செய்துள்ளது. அதில் எந்தவித மாற்றத்திற்கும் இடமில்லை என்றும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவராக மயந்த திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று சபையில் எதிர்க் கட்சியினரால் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

## நாட்டை விற்பதோ, குத்தகைக்கு விடுவதோ அரசின் நோக்கமல்ல

### வெளிநாட்டு முதலீடுகளே எமது இலக்கு

#### வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டை விற்பனை செய்தோ அல்லது குத்தகைக்கு விட்டோ நாட்டை முன்னேற்றும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாதென, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டை விற்பனை செய்வதன்றி முதலீட்டாளர்களை அழைத்து முதலீடுகளை மேற்கொண்டு அதன் மூலம் நாட்டை முன்னேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் குழுவின் இலங்கை வருகை தொடர்பில் வாசுதேவ நாணயக்கார எம்.பியினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

06

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை:

## வெளிவிவகார அமைச்சர் தலையிட்டு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வட பகுதி கடல் எல்லைக்குள் இந்தியா, சீனா உட்பட எந்தவொரு வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கும் அனுமதி வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாதென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எமது மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள வழி வகுக்க வேண்டும் என்றும், அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் இரண்டு கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

கடற்றொழில் தொடர்பில்

06

யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளில்

## சமுர்த்தி கொடுப்பனவு தருவதாக ஒரேநாள் 30 பேரிடம் பண மோசடி

### தனியே இருக்கும் முதியவர்களே இலக்கு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தனியே இருக்கும் முதியவர்களை இலக்கு வைத்து பண மோசடிகள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டும் 30க்கும் மேற்பட்டவர்களிடம் இவ்வாறு பண மோசடி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சுன்னாகம், தெல்லிப்பழை, மல்லாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்ற நபரொருவர், தான் அப்பகுதிக்கு

06

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வாகன விபத்தில் ஒருவர் பலி

### வெளிநாட்டுப் பெண் படுகாயம்




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ நுழைவாயிலுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் காரொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், வெளிநாட்டு பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் (23) இரவு கார் கடவத்தை நோக்கிச் சென்று

06

வேட்புமனு தாக்கல் செய்து சம்பளமற்றிருக்கும்

## 7,000 அரச ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைக்க வேண்டும்

### அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள சம்பளமற்றிருக்கும் 07 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென, எஸ்.பி.திசாநாயக்க எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேர்தலுக்கான முடிவு வரும் வரை அவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் முன்பு ஒரு தடவையும் இவ்வாறு இடம்பெற்றுள்ளது என்றும் அவர் சபாநாயகரிடம் சபையில் சுட்டிக்காட்டினார். சபாநாயகர் அது தொடர்பில் பிரதமரிடம்

06

## கோபா குழு புதிய தலைவராக லசந்த அழகியவண்ண தெரிவு



பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டம் நேற்று (24) நடைபெற்ற போதே, அவர் தெரிவு செய்யப்பட்டார்.

06

வெளிநாட்டுக்கு தப்பிச் சென்ற

## 'பும்மா' வின் சகா கொழும்பில் கைது



வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் வர்த்தகரும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவருமான 'பும்மா' என்ற ஸ்டேன்லி கெனட் பெர்னாண்டோவின் உதவியாளர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் பகுதியில் போதைப்பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய 24 வயதான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனில் ரஷ்ய படையெடுப்புக்கு ஐ.நா பொதுச் சபையில் கண்டனம்




உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை கண்டிக்கும் ஐ.நா பொதுச் சபை தீர்மானம் அதிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் ஆரம்பித்து ஓர் ஆண்டு பூர்த்தியாகும் நிலையில் கடந்த வியாழனன்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் உக்ரைனில் இருந்து ரஷ்ய துருப்புகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் மோதல் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 141 வாக்குகள் பதிவானதோடு ரஷ்யா உட்பட ஏழு நாடுகள் எதிராக வாக்களித்த நிலையில் 32 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்துக்கொண்டன.

உக்ரைன் போரினால் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மில்லியன் கணக்கான மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்தப் போர் சர்வதேச அளவில் உணவு மற்றும் வலுசக்தி நெருக்கடியை ஏற்படுத்தியது.

கடைசியாக கடந்த ஆண்டு ஒக்டோபரில், உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்ததை கண்டித்து இடம்பெற்ற பொதுச் சபை வாக்கெடுப்பில் 143 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. இதற்கு எதிராக ஐந்து நாடுகள் வாக்களித்திருந்த நிலையில் தற்போது எரிட்ரியா மற்றும் மாலி நாடுகள் ரஷ்யாவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த முறை வாக்களிப்பை தவிர்த்திருந்த ஹொன்டுராஸ், லெசதோ, தாய்லாந்து மற்றும் தென் சூடான் நாடுகள் இம்முறை தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பெற்றிருக்கு சூழலில் பொதுச் சபை தீர்மானம் உக்ரைன் போர் தொடர்பான உலகளாவிய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது.

எனினும் மேற்கத்திய நாடுகள் உக்ரைனையும் வளர்ந்து வரும் நாடுகளையும் பயன்படுத்தி, ரஷ்யாவைத் தோற்கடிக்க முற்படுவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யத் தூதர் வசிலி நெபென்ஸியா சாடினார்.

இதில் ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டரஸ் பேசும்போது, "ஐ.நா. விதிகள், சர்வதேச சட்ட விதிகளை மீறி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இதன் காரணமாக பிராந்திய அமைதி சீர்குலைந்துள்ளது. சர்வதேச அளவில் பதற்றம் எழுந்துள்ளது.

போர் என்பது மிகப்பெரிய பிரச்சினை. எந்தவொரு பிரச்சினைக்கும் போர் மூலம் தீர்வு காண முடியாது. உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்" என்று வலியுறுத்தினார். உக்ரைனில் ரஷ்ய படையெடுப்புக்கு ஐ.நா பொதுச் சபையில் கண்டனம்.

## உக்ரைன், ரஷ்யாவுக்கு சீனா சமரச அழைப்பு



உக்ரைனையும் ரஷ்யாவையும் உடனடியாக சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமெனச் சீனா கேட்டுக்கொண்டுள்ளது.

ரஷ்ய–உக்ரைன் போரின் ஓராண்டு நிறைவு நேற்று (24 பெப்ரவரி) அனுசரிக்கப்படும் நிலையில் அது அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

"ரஷ்யாவும் உக்ரைனும் ஒரே இலக்கை நோக்கிச் செயல்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும்" என்று அது குறிப்பிட்டது.

பூசலில் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவது பற்றி ரஷ்ய ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

"அணுவாயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது. அவற்றைப் பயன்படுத்தப் போவதாக மிரட்டுவதும் கூடாது" என்று சீனா தனது அறிக்கையில் கூறியது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டப்படி பொதுமக்களைத் தாக்காமல் தவிர்ப்பது முக்கியம் என்றும் சீனா குறிப்பிட்டது. ரஷ்ய–உக்ரைன் போரைப் பொறுத்தவரை சீனா நடுநிலை வகிப்பதாகக் கூறுகிறது.

## வட கொரியா நான்கு ஏவுகணை சோதனை



வட கொரியா தாழப் பறக்கும் நான்கு ஏவுகணைகளைப் பாய்ச்சி சோதனை நடத்தியுள்ளது.

எதிரிகளின் அணுசக்தித் தாக்குதல்களைத் திறம்பட முறியடிக்கும் ஆற்றல் தன்னிடம் உள்ளது என்பதைக் காட்டுவது அந்தச் சோதனையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது. அந்த விபரங்களை, வட கொரியா செய்தி நிறுவனம் வெளியிட்டது.

வடக்கு ஹாம் கியோங் மாநிலத்தில் அந்த 4 ஏவுகணைகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. அவை கொரியத் தீபகற்பத்திற்குக் கிழக்கே விழுந்தன.

அமெரிக்கா மற்றும் தென் கொரியா இடையே வொஷிங்டன் டி.சியில் இராணுவ ஒத்திகை ஒன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளது. வட கொரியாவின் அணு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கும் நோக்கிலேயே இந்த ஒத்திகை நடைபெறுகிறது.

## பாக்.– ஆப்கான் எல்லை ஆறாவது நாளாக பூட்டு




பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் எல்லை கடக்கும் முக்கிய புள்ளிகளில் ஒன்றான டோர்காம் கடவையை திறக்க தலிபான்கள் இணங்கியபோதும் அந்த எல்லைக் கடவை தொடர்ந்து ஆறாவது நாளாக நேற்றைய (25) தினத்திலும் மூடப்பட்டிருந்தது.

இந்த எல்லை கடவையை திறப்பதாக செய்தி பரவியதை அடுத்து ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் பக்கத்தில் மக்கள் திரண்டதால் நீண்ட வரிசை ஏற்பட்டுள்ளது. இங்கு சரக்கு வாகனங்களும் சில நாட்களாக எல்லையை கடக்க நீண்ட வரிசையில் காத்துள்ளன.

பாகிஸ்தான் தன் பங்களிப்புகளை மீறியதன் விளைவாக இந்த எல்லை கடக்கும் புள்ளியை மூடியதாகக் குறிப்பிட்டுள்ள தலிபான்கள் அந்த பங்களிப்புக்களை குறிப்பிடவில்லை. இது தொடர்பில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சும் எந்த கருத்தையும் கூறவில்லை.

## அமெரிக்காவில் பனிப்புயல்



வழக்கமாக இதமான சூடு நிலவும் அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையான பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸின் கிழக்கு மலைப்பகுதிகளில் இன்று சனிக்கிழமை 8 அடி வரை பனிப்பொழிவு இடம்பெறும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. ஏற்கனவே வட அமெரிக்காவில் உறையும் காலநிலையுடன் பாரிய பனிப்புயல் நிலவி வருகிறது.

வீதிகளில் பனி படிந்திருப்பதால், ஓட்டுநர்கள் கவனமாகப் பயணம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது அங்குள்ள பாடசாலைகளும் அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. மிச்சிகன் உள்ளிட்ட சில பகுதிகளில், மின்தடை கடுமையாகி வருகிறது.

அங்குள்ள 800,000க்கும் அதிகமான வீடுகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தென் பகுதியில் முன்னெப்போதும் இல்லாத கடும் வெப்ப அலை பாதித்த நிலையிலேயெ அங்கு காலநிலையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

## விண்வெளியில் வீரர்களை மீட்டுவர விண்கலத்தை அனுப்பியது ரஷ்யா



விண்கலத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக விண்வெளி ஆய்வு நிலையத்தில் சிக்கியுள்ள 3 விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பும் வகையில் மாற்று விண்கலத்தை ரஷ்யா ஏவியுள்ளது.

இந்த மீட்பு விண்கலம் ரஷ்யா நிர்வகிக்கும் கசகஸ்தானில் உள்ள மைகொனுர் ஏவுதளத்தில் இருந்து நேற்று (24) விண்வெளிக்கு ஏவப்பட்டது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ள அமெரிக்காவின் நாசா மற்றும் ரஷ்யாவின் ரோஸ்கோஸ்மோஸ் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.


அதன்படி கடந்த ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் எம்.எஸ்–22 விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அமெரிக்க விண்வெளி வீரர் பிரான்சிஸ்கோ ருபியோ, ரஷ்ய விண்வெளி வீரர்களான செர்கி புரொகொபியேவ், டிமிட்ரி பெட்டலின் ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் டிசம்பர் 14ஆம் திகதி திடீரென விண்கலத்தில் கசிவு கண்டுபிடிக்கப்பட்டது. கசிவு ஏற்பட்டதை அடுத்து வீரர்களின் விண்வெளி நடைப்பயணம் ரத்து செய்யப்பட்டது. விண்கல் ஒன்று மோதியதால் பழுது ஏற்பட்டு இருக்கலாம் என்று நாசா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் விண்வெளியில் சிக்கியுள்ள 3 வீரர்களை பூமிக்கு அழைத்துவர சோயுஸ் எம்.எஸ்–22 என்ற மாற்று விண்கலத்தை ரஷ்யா செலுத்தியுள்ளது. அது வரும் ஞாயிறன்று (26) சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இந்த மூன்று விண்வெளி வீரர்களும் வரும் செப்டெம்பர் மாதமே பூமிக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குவான்தனாமோ சிறையில் இருந்து இரு பாக். சகோதரர்கள் விடுதலை



எந்த குற்றச்சாட்டுகளும் பதியாமல் கடந்த 20 ஆண்டுகளாக குவான்தனாமோ இராணுவ சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு பாகிஸ்தான் நாட்டு சகோதரர்களை அமெரிக்க நிர்வாகம் விடுவித்துள்ளது.

இந்த சிறைச்சாலையை மூட அமெரிக்கா திட்டமிடும் நிலையிலேயே 55 வயது அப்துல் மற்றும் 53 வயது முஹமது ரபானி ஆகிய சகோதரர்கள் தமது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.


கியூபாவில் இருக்கும் இந்தக் கடற்படைத் தளம் செப்டெம்பர் 11 தாக்குதல் சந்தேக நபர்களை தடுத்து வைக்கும் சிறைச்சாலையாக முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் காலத்தில் மாற்றப்பட்டது. 2002ஆம் ஆண்டு கராச்சியில் உள்ள தமது வீட்டில் இருந்து இந்த சகோதரர்கள் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதை அடுத்து அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த இருவரும் அல் கொய்தா உறுப்பினர்களுக்கு வீடு வழங்கியும் சிறு அளவான ஏற்பாட்டு ரீதியான உதவிகளையும் வழங்கியதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம்சாட்டினர்.

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ பிடியில் தாம் சித்திரவதையை எதிர்கொண்டதாக இந்த சகோதரர்கள் குற்றம்சாட்டினர். பின்னர் இவர்கள் குவான்தனாமோவுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களிடம் இருந்து மிகக் குறைந்த உளவு தகவல்களே கிடைத்ததாக அமெரிக்காவின் இராணுவத்தின் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய குவான்தனாமோ சிறையில் அதன் உச்சத்தில் இருந்த 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கு சுமார் 600 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது அங்கு 32 கைதிகளே எஞ்சியுள்ளனர்.

## நீர் வற்றியதால் மிதக்கும் வெனிஸ் நகர் ஸ்தம்பிதம்



மிதக்கும் நகரான வெனிஸில் சில வாரங்களாக மழை பெய்யாததால் கால்வாய்கள் வற்றியுள்ளன. மேலும் வழக்கத்திற்கு மாறாகப் பனிப்பொழிவும் குறைந்ததால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகளும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியில் மற்றொரு வறட்சி பற்றிய அச்சத்திற்கு மத்தியிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆல்ப்ஸ் பகுதியில் வழக்கமான பனிப்பொழிவில் பாதிக்கும் குறைவான அளவே பதிவாகி உள்ளது.

வடக்கு இத்தாலியில் உள்ள கார்மா ஏரியின் நீர் மட்டம் சாதனை அளவுக்கு குறைந்துள்ளது. இதனால் அந்த ஏரியில் இருக்கு சிரிய தீவான சான் பியாகியொவுக்கு நடந்து செல்ல முடியுமாகியுள்ளது.

நிரந்தர வெள்ளம் இருக்கும் வெனிஸ் நகரில் நீர் வற்றியதால் நீரில் செல்லும் டெக்சி படகுகள் மற்றும் அம்புலன்ஸ்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## உலக வங்கி தலைமைக்கு பங்காவின் பெயர் பரிந்துரை



உலக வங்கி தலைமை பதவிக்கு இந்திய வம்சாவளி வர்த்தகரான அஜய் பங்காவின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பரிந்துரைத்துள்ளார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கும்படி உலக வாங்கிக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துவரும் நிலையிலேயே இந்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பங்கா மாஸ்டர்கார்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக ஒரு தசாப்தத்திற்கு மேல் பணியாற்றிய நிலையில் தற்போது ஜெனரல் அட்லாண்டிக் நிறுவனத்தின் துணைத் தலைவராக பணியாற்றுகிறார். உலக வங்கி தனது இலக்கை எட்டுவதற்கு தனியார் துறையுடன் இணைந்து செயற்பட பாங்காவின் அனுபவம் உதவும் என்று அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் வங்கியின் நிர்வாக சபையே அடுத்த தலைவரை தேர்வு செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாட்ஸ்அப்பில் அனுப்பிய செய்தியை திருத்த வசதி




வாட்ஸ்அப் செயலியில் அனுப்பிய செய்திகளை திருத்தம் செய்யும் வசதியை அந்நிறுவனம் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

மெட்டா நிறுவனத்தின் கீழ் இயங்கி வரும் வாட்ஸ்அப் செயலிக்கு உலகம் முழுவதும் பயனர்கள் உள்ளனர். பயனர்களின் வசதிக்காக வாட்ஸ்அப் செயலி அவ்வப்போது புதிய வசதிகளை அறிமுகப்படுத்தி வருகிறது.

அதன்படி பயனர்களின் உபயோகத்திற்காக புதிய வசதியை அறிமுகப்படுத்த உள்ளதாக வாட்ஸ்அப் நிறுவனம் அறிவித்துள்ளது.

வாட்ஸ்அப் நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பின்படி தங்களது நண்பர்களுக்கு அனுப்பிய செய்திகளை திருத்தம் செய்வதற்கான வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதன்படி அனுப்பிய செய்தியை 15 நிமிடத்திற்குள்ளாக திருத்தம் செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வசதி சோதனை ஓட்டத்தில் இருப்பதாகவும் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் எனவும் வாட்ஸ்அப் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வயோதிபப் பெண் கண்ணில்
## மிளகாய்த்தூள் வீசி நகைகள் கொள்ளை

பதுளை, பொரலந்த பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த பெண், அங்கிருந்த வயோதிபப் பெண்ணின் கண்களில் மிளகாய்ப் பொடியைத் வீசி, அவரின் கழுத்தை நெரித்து 3,48,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றபோது, அப்பெண்ணை போகஹகும்புர பொலிஸார் கைது செய்தனர்.

அதே பகுதியில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

72 வயதான வயோதிபப் பெண் சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்தபோது, பின்னால் சென்ற மற்றைய பெண் மிளகாய் பொடியை கண்களில் வீசி விட்டு அவரது கழுத்தை நெரித்து கழுத்திலிருந்த 06

## தமிழக மனித உரிமை ஆணைக்குழுத் தலைவருடன் ம.ம.முன்னணி உப தலைவர் சதீஷ்குமார் சந்திப்பு



தமிழ்நாட்டு அரசாங்கத்தின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரும் நீதியரசருமான எஸ்.பாஸ்கரனை, இலங்கை மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவரும் மனித உரிமைகள் சார்ந்த சமூக பொருளாதார மையத்தின் தலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், சென்னையிலுள்ள மனித உரிமைகள் மாநில செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பிரகடனம் தொடர்பான 75ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கையிலும் இந்தியாவிலும் கூட்டாக முன்னெடுக்கப்படவுள்ள சமூக ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. குறிப்பாக, தமிழக அகதிகள் முகாம்களிலும் வெளியிலும் வாழும் இலங்கை பிரஜைகளின் விருப்பத்துக்கேற்ப தாயகம் திரும்புவது மற்றும் அவர்களது உரிமைகள் சார்ந்த விவகாரங்களில் மனித உரிமைகள் கோட்பாடுகள் அடிப்படையில் ஐ.நா. நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பெறுவதோடு, ஊட்டி மற்றும் தேயிலை விவசாயப் பகுதிகளில் புலம்பெயர்ந்து வாழும் மலையக மக்களின் ஒருங்கிணைந்த தாயகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது, சென்னை தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் டி.இளங்கோவனும் கலந்துகொண்டார். தேச இலங்கை மன்னனின் வெளியீடான சிறுவர் உரிமைகள் தொடர்பான நூலின் சிறப்பு பிரதியொன்றும் நீதியரசர் பாஸ்கரனிடம் கையளிக்கப்பட்டது.

## தவக்கால சிந்தனை



### வாழ்வளிப்பதற்கு ஏற்புடைய காலம்

(சனி லூக்கா 5: 27 – 32)

தவக்காலத்தின் முதலாவது சனிக்கிழமையில் அடியெடுத்து வைக்கின்றோம்.

வாழ்விழந்தோரை நாடி வாழ்வளிப்பதற்கு ஏற்புடைய காலம் தவக்காலம் என்பதனை இன்றைய நற்செய்தி வாசகங்கள் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு சுங்கத்துறையில் அமர்ந்திருந்த லேவி என்கிற மத்தேயுவை 'என்னைப் பின்பற்றி வா'என்று அழைக்கிறார்.

அவரும் அனைத்தையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றிச் செல்கிறார். தமது வீட்டில் அனைவருக்கும் விருந்து படைத்து மகிழ்கின்றார்.

இயேசுவும் தமது பதிலுக்கு 'நேர்மையாளர்களையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்'என்கிறார். இங்கு இயேசுவின் பணியின் புதிய பரிமாணம் புலப்படுகிறது. அவரது பணியானது சமூகத்தின் விளிம்புநிலை மாந்தரை நோக்கியது என்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

கைவிடப்பட்டோர், புறக்கணிப்பட்டோர், புறந்தள்ளப்பட்டோர், ஏழைகள், அநாதைகள், கைம்பெண்கள், நாதியற்றோர் இவர்களே தமது பணியின் இலக்கு மக்களென்று அடையாளம் காட்டுகின்றார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் வாழ்வும், பணியும் கிறிஸ்துவின் பணியினை முன்னோக்கி நகர்த்துவதேயன்றி வேறொன்றுமில்லை.

வாழ்விழந்தோரை நாடி வாழ்வளிப்பதற்கு ஏற்புடைய காலம் தவக்காலம் என்பதனை மனதிற்கொள்ளுங்கள், செயற்படுங்கள்.

அருட்தந்தை நவாஜி...

### யாழ். தெல்லிப்பழை வைத்தியசாலை
## புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு மருந்துவகைகள் கையளிப்பு

**ஒரு கோடியே 91 இலட்சம் ரூபா பெறுமதி**

*யாழ். விசேட நிருபர்*

யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு கோடியே 91 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களுடன், ஒரு தொகுதி மருந்துகளும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் லங்கா லயன்ஸ் பவுண்டேஷனினால் நேற்று (24) 06

### கிராமிய கடன்கள், சமூக பாதுகாப்பு
## வலையமைப்பு தொடர்பில் தேசிய சபை உப குழுவில் ஆராய்வு





கிராமிய கடன்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய சபையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது. உப குழு, அதன் தலைவர் பாராளுமன்ற 06

### நைஜீரியாவில் தேர்தல் கண்காணிப்பாளராக
## கென்ய தூதுவர் கனா கனநாதன் தெரிவு



நைஜீரியாவில் தேர்தல் கண்காணிப்பாளராக கென்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனா கனநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நடைபெறவுள்ள நைஜீரிய ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவுமே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தேர்தல்கள் இன்று 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. நைஜீரியா அரசு மற்றும் சுதந்திர தேசிய தேர்தல் ஆணைக்குழு இவரை தெரிவு செய்துள்ளது.

### இலங்கை - அமெரிக்க பாராளுமன்ற
## நட்புறவுச் சங்க தலைவராக சந்திம வீரக்கொடி தெரிவு





இலங்கை ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சந்திம வீரக்கொடி (23) தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான நிர்வாக அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் (23) பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இக்கூட்டத்தில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார். பாராளுமன்ற சபை முதல்வர், அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்ஷன தெனிபிடியவும், உப தலைவர்களாக இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரல மற்றும் வேலுகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், நட்புறவுச் சங்கத்தின் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா மற்றும் உதவிச்செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் 06

## முஜிபுர் ரஹ்மானை கட்சியினரே பலி கொடுத்து விட்டனர்

### அவரை பாதுகாக்கவே நான் பெரிதும் முயன்றேன்

**ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

முஜிபுர் ரஹ்மான் எம்.பியை நான் பாதுகாக்க முயன்ற போதும் அவரது கட்சியினரே அவரைப் பலி கொடுத்துவிட்டனரென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் கீழான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முஜிபுர் ரஹ்மான் எம்.பி. பதவியிலிருந்து விலகுவதாக அறிந்தேன். அவரை பதவி விலக வேண்டாம் . நீங்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர், உங்களை உங்கள் கட்சியினர் பலி கொடுக்கப் போகின்றனர் என அவருக்கு நான் தகவல் அனுப்பினேன் என்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் எம்.பியை நானே பாராளுமன்றத்துக்கு அழைத்து வந்தேன். அவர் 06

### நாங்களும் சுயாதீன எதிர்க்கட்சிகளே
## பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் எமது பிரதிநிதித்துவமும் அவசியம்

**வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் எதிர்க்கட்சிகளல்ல, நாங்களும் சுயாதீன எதிர்க்கட்சிகளாக செயற்படுகிறோம். ஆகவே, பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் எங்களின் பிரதிநிதித்துவமும் இடம்பெற வேண்டுமென, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார். 06

### பௌத்த பாளி பல்கலைக்கழகத்துக்குள்
## பிக்கு மாணவர்களின் அத்துமீறல்களின் பின்னணியில் சூழ்ச்சியான செயற்பாடு

**அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பௌத்த பாளி பல்கலைக்கழகம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலேயே பிக்கு மாணவர்கள் கல்வி அமைச்சுக்குள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டதாக, சபை முதல்வர், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த சம்பவத்தின் போது, ஆசிரியர்கள் சிலர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சியினர் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர்,

பௌத்த பாளி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழான 06

### ID, Passport அலுவலகம் நாடி வரும்
## மக்களின் வசதிக்கு இருக்கைகள் வசதி



ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களங்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள வரும் பொதுமக்களின் வசதிக்காக, இருக்கைகளை பொருத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் 06

### வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாக
## கடவுச்சீட்டுக்கள் பலவற்றை வைத்திருந்த நபரொருவர் கைது

**கல்முனை பஸ் தரிப்பு நிலையத்தில் சம்பவம்**

*ஒலுவில் விசேட நிருபர்*



கடவுச்சீட்டுகள் பலவற்றை தன் வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை, கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை பஸ் தரிப்பு நிலையத்தில் (23) சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர், கடவுச்சீட்டுகள் பலவற்றை பல பேரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதாக கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியைச் சேர்ந்த 51 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி சிலரிடம் பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டுகளும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.03 | 254.04 |
| கனடியன் டொலர் | 263.67 | 274.49 |
| யூரோ | 378.70 | 393.57 |
| ஜப்பான் யென் | 2.6449 | 2.7490 |
| சிங்கப்பூர் டொலர் | 266.34 | 276.85 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.16 | 446.41 |
| சுவிஸ் பிராங்க் | 382.78 | 399.95 |
| அமெரிக்க டொலர் | 359.00 | 368.52 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.24 | கட்டார் ரியால் | 99.07 |
| குவைத் டினார் | 1,179.31 | சவூதி ரியால் | 96.40 |
| ஓமான் ரியால் | 939.32 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.46 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 13ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 04

## குறள் தரும் சிந்தனை



இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்

*மனமாறுபாடு என்றும் நோயை யார் தங்கள் மனத்தை விட்டு அகற்றிவிடுகிறார்களோ அவர்களுக்கு மாசற்ற நீடித்த புகழ் உண்டாகும்.*

# வீதிவிபத்துகள் அதிகரித்து வருவதால் மக்கள் மத்தியில் அவதானம் தேவை!

நாட்டில் சமீப காலமாக வாகனவிபத்துகள் அதிகரித்துள்ளன. கூடுதலான வாகன விபத்துகள் மலையகப் பகுதிகளிலேயே இடம்பெறுவதைக் காண முடிகின்றது. பயணிகள் பஸ்கள் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து மோசமான விபத்துக்குள்ளான சம்பவங்கள் பல இடங்களில் இடம்பெற்றுள்ளதுடன், பயணிகள் பலர் உயிரிழந்துமுள்ளனர்.

இரவு நேரத்தில் மாத்திரமன்றி பகல் நேரங்களிலும் மலையகப் பிரதேசங்களில் வாகன வீதிவிபத்துகள் அடிக்கடி இடம்பெறுவதை அறிய முடிகின்றது. பயணிகள் ஒவ்வொருவரும் ஏதோவொரு எதிர்பார்ப்பிலேயே பயணம் செய்கின்றனர். ஆனால் எதிர்பாராமல் விபத்தில் சிக்கி உயிரிழக்கும் போது அவர்களது எதிர்பார்ப்புகளே கனவாகி விடுகின்றன.

எமது நாட்டில் வீதிவிபத்துகளால் தினமும் சராசரியாக ஐந்துக்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழக்கின்றனர். சிறியதொரு நாடான இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த உயிரிழப்பு எண்ணிக்கை அதிகமானதாகும். வளர்ச்சியடைந்த பெரிய நாடுகளில் கூட இவ்வாறு அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதில்லை. எனவே இந்த விடயம் குறித்து அலட்சியமாக இருந்து விட முடியாது.

மலையகப் பகுதிகளில் அடிக்கடி இடம்பெறுகின்ற வீதிவிபத்துகளுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. தற்போது பகல் வேளையிலும் மலையகப் பகுதிகளில் பனிமூட்டம் காணப்படுகின்றது. மலையகப் பாதைகளை சரியாக அவதானித்து வாகனத்தைச் செலுத்துவதில் சிரமம் உள்ளதாக வாகன சாரதிகள் கூறுகின்றனர். அதுமாத்திரமன்றி, எதிரே வருகின்ற வாகனத்தையும் அவதானிப்பதில் சிரமம் உள்ளதாக வாகனசாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிடுகின்ற போது விபத்துகள் இடம்பெறும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. எதிரே வருகின்ற வாகனங்கள் மின்னொளியைப் பாய்ச்சி வருகின்ற போதிலும், அவ்வாகனங்களை அவதானிப்பதில் சிரமம் உள்ளதாக வாகனசாரதிகள் கூறுகின்றனர். அவ்வேளையில் வாகனவிபத்துகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

அதேசமயம் மலையகப் பாதைகளில் வாகனம் செலுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. அடிக்கடி அவ்வீதிகளால் செல்கின்ற சாரதிகளுக்கு வீதிகள் ஓரளவு பரிச்சயப்பட்டதாக இருக்கும். ஆனால் அவ்வீதிகளில் புதிதாகப் பயணம் செய்கின்ற சாரதிகளுக்கு அப்பயணம் மிகவும் ஆபத்து நிறைந்ததாகும். மலையகப் பிரதேசங்களுக்கு புதிதாக பயணம் செய்கின்ற வாகனசாரதிகளே விபத்துக்கு உள்ளாகும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

வாகனவிபத்துகள் அதிகரித்திருப்பது குறித்தும், பயணிகள் உயிரிழப்பது அதிகரித்து வருவது குறித்தும் எத்தனையோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட விபத்துகள் இன்னுமே குறைவதாக இல்லை. விபத்துகளும் உயிரிழப்புகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. வாகனசாரதிகளின் அலட்சியம் காரணமாக பயணிகளே பரிதாபமாக உயிரிழக்க வேண்டி ஏற்படுகின்றது.

நாட்டிலுள்ள வீதிகள் தற்போது நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. இதன் காரணமாக வீதிகளில் வாகனங்கள் அதிகரித்த வேகத்துடன் பயணம் செய்வதைக் காண முடிகின்றது. அதுவும் இரவு வேளைகளில் பயணிகள் வாகனங்கள் அதிகூடிய வேகத்துடன் செல்வதைக் காண முடிகின்றது. எனவேதான் இரவு வேளைகளில் இடம்பெறுகின்ற விபத்துகளின் போது சேதங்களும் உயிரிழப்புகளும் அதிகளவில் ஏற்படுகின்றன. அதிகரித்த வேகத்தைக் கட்டுப்படுத்தாவிடின் அநியாக உயிரிழப்புகளையும் தவிர்க்க முடியாது போய்விடும்.

வாகன சாரதிகளில் அநேகர் தவறிழைப்பவர்களாகவே உள்ளனர். முச்சக்கரவண்டிகள், தனியார் பேருந்துகள் போன்றவற்றின் சாரதிகளில் அநேகமானோர் இழைக்கின்ற தவறுகள் கொஞ்சநஞ்சமல்ல. முச்சக்கரவண்டி சாரதிகளில் பெரும்பாலானோர் வீதிகளில் தவறிழைப்பவர்களாகவே உள்ளனரென மக்கள் குறை கூறுகின்றனர்.

வீதிகளில் நடமாடுகின்ற மக்கள் குறித்து அவர்களில் பலர் சிந்திப்பதில்லை. தனியார் பஸ் சாரதிகளில் பலரும் மக்களின் பாதுகாப்பு குறித்து கவனம் கொள்வதில்லை. அவர்கள் மத்தியில் தொழில் போட்டி எந்நேரமும் உள்ளது. பணம் உழைப்பதில் மாத்திரமே அச்சாரதிகள் கவனம் கொள்கின்றனர். வீதியில் நடமாடுகின்ற அப்பாவி மக்களின் உயிர்ப்பாதுகாப்பு குறித்து அவர்கள் சற்றும் கவனம் கொள்வதில்லை.

இதன் காரணமாகவே எமது நாட்டில் தினமும் விபத்துகளும் உயிரிழப்புகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. நாம் வீதியோரம் நடந்து செல்கின்ற வேளையிலும் கூட மிகுந்த அவதானம் பேணுவது அவசியமாகின்றது. நாம் அவதானமாக பாதையோரம் நடந்து செல்கின்ற போதிலும் கூட வாகனசாரதிகளின் கவனக் குறைவினால் விபத்தைச் சந்திக்கும் ஆபத்து உள்ளது.

எனவே வீதியோரம் நடந்து செல்கின்ற வேளையிலும், வீதியைக் கடக்கின்ற போதிலும் மிகுந்த அவதானம் பேணுவது அவசியமாகின்றது.

மனித உயிர்கள் மிகவும் பெறுமதியானவையாகும். மனிதஉயிர்களின் பாதுகாப்பு குறித்து சாரதிகள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# பாகிஸ்தானில் மோசமான பொருளாதார நெருக்கடி!





உணவுப் பொருட்களை வாங்குவதற்கு மக்களிடம் பணமில்லை!

## பாகிஸ்தானின் தவறான செயற்பாடுகளே அந்நாட்டின் இன்றைய வீழ்ச்சிக்குக் காரணமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து!

தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவித்து வந்ததாகவும், தீவிரவாதத்தை ஒரு தொழிற்கூடமாகவே வைத்திருந்த பாகிஸ்தானால், தற்போதைய இக்கட்டான பொருளாதார சூழலில் இருந்து வெளிவருவது கடினம் என்றும் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மேலும் இன்றைக்கு பாகிஸ்தானை சூழ்ந்திருக்கும் இருளுக்கு, முழுக்க முழுக்க அந்நாடும், அது மேற்கொண்ட நடவடிக்கைகளுமே காரணம் என்றும் ஜெய்சங்கர் கூறினார்.

டெல்லியில் நடைபெற்ற ஆசிய பொருளாதார மாநாட்டில் பங்கேற்று பேசிய ஜெய்சங்கர், பாகிஸ்தானின் பொருளாதார நிலைமை குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட பயங்கர வெள்ளம், தவறான பொருளாதாரக் கொள்கை, வரை முறையில்லாமல் வாங்கிய கடன் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பாகிஸ்தான் இன்றைக்கு மோசமான பாதிப்பை சந்தித்துள்ளது. கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணியும், திறைசேரிப் பணமும் மொத்தமாக காலியானதால் சில தினங்களுக்கு முன்பு பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் உள்ளதாக செய்திகள் வெளிவந்தன.

நிதிப் பற்றாக்குறையால் வெளிநாடுகளில் இருந்து உணவுப்பொருட்களை வாங்கக் கூட பணம் இல்லாத நிலைக்கு பாகிஸ்தான் தள்ளப்பட்டுள்ளது. இதனால் கோதுமை, அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கற்பனை செய்ய முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இப்போதைய சூழலில், பாகிஸ்தானில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தால் இரு வேளை உணவு உண்பதே கடினமானதாக மாறிவிட்டது. இதன் காரணமாக, கோதுமை உள்ளிட்ட உணவுப்பொருட்களை வாங்க மக்கள் சண்டையிட்டு கொள்கிறார்கள்.

இந்நிலையில், டெல்லியில் ஆசிய பொருளாதார மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆசிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத் துறை அமைச்சர்கள், நிதி அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அப்போது, பாகிஸ்தான் விவகாரம் தொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேசுகையில், "பாகிஸ்தானுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நிலைக்கு முழுக்க முழுக்க அந்நாடுதான் காரணம்.

பாகிஸ்தானை பொறுத்தவரை, புத்திசாலித்தனமான பொருளாதாரக் கொள்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், தீவிரவாதத்தை ஒரு தொழிற்கூடமாகவே பாகிஸ்தான் வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நாட்டால், இதுபோன்ற கடினமான சூழலில் இருந்து வெளிவருவது கடினம். மேலும், ஒரு வளமான நாடாகவும் பாகிஸ்தானால் மாற முடியாது.

இந்த சூழலில் பாகிஸ்தானுக்கு இந்தியா உதவுமா அல்லது உதவாதா என்பதை நான் முடிவு செய்ய முடியாது. அதற்கு முன்பு இந்திய மக்களின் உணர்வை நான் அறிந்துகொள்ள வேண்டும்" என ஜெய்சங்கர் கூறினார்.

இது இவ்விதமிருக்க பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடி தணிய வேண்டுமானால் அந்நாட்டுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பொருளாதாரக் கொள்கைகளே கைகொடுக்குமென்று பாகிஸ்தான் மக்களில் ஒருசாரார் தெரிவித்து வரும் கருத்துகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

(One India Tamil)

# இந்தியப் பிரதமர் மோடியை புகழும் பாகிஸ்தான் யூடியூபர் சனா அம்ஜத்

பாகிஸ்தானில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு உள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறையாலும் அந்நாடு சிக்கி தவித்து வருகிறது. பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்த கூடிய ரொட்டி, பால் பொருட்கள் மற்றும் கோதுமை உள்ளிட்ட பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பணவீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடியுடன், கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூனில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. எரிசக்தி துறையில் ஏற்பட்ட பாதிப்பால், எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.




பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, அமெரிக்கா மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகளிடம் பாகிஸ்தான் கடன் கேட்டுள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் யூடியூபர் சனா அம்ஜத் வெளியிட்டுள்ள வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

முன்னாள் பத்திரிகையாளரான சனா அம்ஜத் வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், பாகிஸ்தான் இளைஞர் ஒருவர், தற்போது நாட்டில் நிலவும் விவகாரங்கள் குறித்து ஷேபாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக பேசுவதுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பாகிஸ்தானை ஆட்சி செய்தால் நியாயமான விலையில் பொருட்களை வாங்கியிருக்க முடியும் என்று கூறுகிறார். பிரதமர் மோடியையும் அவரது செயல்பாடுகளையும் வெகுவாகப் புகழ்ந்த அந்த பாகிஸ்தானியர், மோடி இருந்தால், நமக்கு நவாஸ் ஷெரீப் அல்லது பெனாசிர் அல்லது இம்ரான் தேவையில்லை என்றார். நாட்டில் உள்ள அனைத்து விஷம சக்திகளையும் அவரால் சமாளிக்க முடியும், இந்தியா தற்போது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது, நாம் எங்கும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மோடியின் ஆட்சியில் வாழ நான் தயார். மோடி ஒன்றும் மோசமான மனிதர் அல்ல. இந்தியர்களுக்கு பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கின்றன எனவே, மோடியை நமக்கு கொடுத்து, அவர் நம் நாட்டை ஆள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்" என்று கூறினார் அந்த நபர்.

இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

# ஜெயலலிதாவின் 75 ஆவது பிறந்ததினம் நேற்று அனுஷ்டிப்பு

தமிழ்நாட்டை ஐந்து முறை ஆட்சி செய்த அஞ்சா நெஞ்சு கொண்ட அரசியல் தலைவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75 ஆவது பிறந்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு அரசியல் களத்தில் ஆண்களின் ஆதிக்கக் கூட்டத்திற்கு நடுவே நிமிர்ந்த நன்னடை பயின்றார் ஒரு பெண்மணி. கோட்டையைப் பிடித்து கொடியேற்றிய அவரது நிஜப்பெயர் கோமளவல்லி. பின்னர் நாடறிந்த கம்பீரமான பெயர் ஜெயலலிதா. கட்சியினர் அவரை அழைத்ததோ புரட்சித் தலைவி என்று, ஆனால் மக்கள் மனங்களில் நின்ற பெயர் அம்மா.

75 ஆண்டுகளுக்கு முன், அதாவது 1948 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் மைசூர் அருகே பிறந்தார் கோமளவல்லி. பெயருக்கேற்ற கோமளமாய் வளர்ந்த ஜெயலலிதா திரைத்துறையில் மாணிக்கமாய் ஜொலித்தார். எம்ஜிஆர், சிவாஜி, ஜெய்சங்கர் என்று அவர்கால சூப்பர் ஸ்டார்களுடன் ஜோடி போட்ட கம்பீர நடிகை ஜெயலலிதா.



மக்கள் மனம் வென்ற அம்மாவாய் 1991 ம் ஆண்டு ஐந்தாவது முதலமைச்சராக சிம்மாசனத்தில் அமர்ந்தார். அதன்பின் 2001, 2006, 2011, 2016 என நான்கு முறை முதலமைச்சராக சேவை செய்தார். எம்.ஜி.ஆர் என்னும் அரசியல் ஜோதி பற்ற வைத்த 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் நெருப்பை, காட்டுத்தீ ஆக்கி, இருட்காலம் சேர விடாமல் வெளிச்சத்தைப் பாய்ச்சிய இரும்புப் பெண்மணி ஜெயலலிதா. எம்ஜிஆரின் மறைவுக்குப் பிறகு கட்சி இரண்டாக பிளவுற்றபோது தம் பெரும்பான்மையையும், மக்கள் மனத்தில் தமக்கான இடத்தையும் நிரூபித்து கட்சியைக் கட்டுக்கோப்பான இயக்கம் ஆக்கியவர் ஜெயலலிதா. இன்று வரை அதிமுகவுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் பெரும் செல்வாக்கிற்கும், ஒருகோடி தொண்டர்ப் படை என்று சொல்லப்படும் பெருமைக்கும் உழைத்தவர் ஜெயலலிதா.

அதிமுகவை இந்திய அளவில் புகழ்பெறச் செய்ததில் இவரது பங்கு மறுக்கவோ, மறக்கவோ முடியாதது. தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தை தம் ஒவ்வொரு அசைவிலும் சிந்தித்து செயலாற்றிய புதுமைப் பெண் ஜெயலலிதா. அவர் பெண்களுக்காக செய்த முத்தான 10 திட்டங்கள் காலமுள்ள வரையில் அவரது பெயரைச் சொல்வன.

அரசியல் மூலம் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எத்தனை புரட்சிகளை அவர் விதைத்தாரோ, அதே அளவு சர்ச்சைகளும் வழக்குகளும் அடக்குமுறைகளும் ஜெயலலிதாவை நோக்கி எய்யப்பட்டன. ஆனால், அனைத்தையும் தம்முடைய வியூக மதியாலும், விடா முயற்சியாலும் முறியடித்தார் ஜெயலலிதா.

தமிழ்நாட்டில் பொதுவாழ்வில் எத்தனையோ பெண்கள் தடம்பதித்து, விதை விதைத்துச் சென்றாலும், ஜெயலலிதாவுக்குப் பின் எழுந்த ஒவ்வொரு பெண் அரசியல்வாதியிடமும் அவர் சாயல் இருப்பது இன்றியமையாதது ஆகிவிட்டது. ஜெயலலிதாவின் பெயரைக் காலம் மறக்கலாம், ஆனால் அம்மா என்னும் மந்திரம் மக்கள் மனங்களில் அவர்கள் வாழ்வு உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

# அல்நஜா விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழாவும் கௌரவிப்பும்

அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகத்தினால் கழகவீரர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற, திறமைகளை வெளிக்காட்டிய வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு அல்நஜா விளையாட்டு மைதானத்தில் சமீபத்தில் இடம்பெற்றது.

அல் நஜா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் றிஸ்வான்(விளையாட்டு பயிற்றுவிப்பாளர்) தலைமையில் நடத்தப்பட்ட இந்நிகழ்வினை உபதலைவர் எஸ். எம். இத்ரீஸ் நெறிப்படுத்தியிருந்தார்.

குறித்த நிகழ்வில் அட்டாளைச்சேனை அக் /அந்நூர் மகாவித்தியாலயத்தில் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப் பரிசில்பரீட்சையில் சித்திபெற்ற 07மாணவர்கள், கற்பித்த ஆசிரியர் ஆர். ஹாறூன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.





நிகழ்வில் பிரதம அதிதியாக மாற்றத்துக்கான முன்னணியின் தலைவரும் , மாவட்ட சுகாதார கல்வி அதிகாரியுமான எம்.ஜே.எம். பைறூஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

விசேட அதிதிகளாக செயலாளர் அஸ்வர் ஷாலி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்எஸ்.எல்.முனாஸ் மற்றும் சமூக ஆர்வலரும், ஊடகவியலாளருமான கே.அப்துல் ஹமீட், அதிபரும், சிரேஷ்ட ஊடவியலாளருமான எம்.ஐ.எம். றியாஸ் மற்றும் அவசர மருத்துவ உத்தியோகத்தர் ஐ.ரீ.ஹானின் ஆகியோருடன் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் நிர்வாகசபைத் தலைவரும் சட்டத்தரணியுமான ஜுனைதீன் ஆகியோருடன் கழகத்தின் ஆலோசகர்களான எஸ். எல்.முசம்மில், ரீ.எல்.ஐனுதீன் மற்றும் உபசெயலாளர் ஆர். ஹசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



நிகழ்வில் அல் நஜா விளையாட்டுக் கழக வீரர்களிடையே இடம்பெற்ற கிரிக்கட், கால்பந்து, மெய்வல்லுனர் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற மற்றும் திறமைகளை வெளிக்காட்டிய வீரர்கள் பரிசில்கள், கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில்சித்திபெற்ற அந்நூர் மகா வித்தியாலய மாணவர்கள் ஏழு பேர் கௌவிக்கப்பட்டனர் இந்நிகழ்வில் பிரதி அதிபர் எம்.எச்.எம் றமீஸ், வகுப்பாசிரியர் ஆர். ஹாறூன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திரதினத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள், சிறுவர்கள், கழக நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். குறித்த இந்நிகழ்வில் மாற்றத்துக்கான முன்னணியின் தலைவருக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்ன கௌரவத்தினை கழகத்தின் உபதலைவரும், சமூக ஆர்வலருமான எஸ்.எம். இத்ரீஸ் வழங்கி வைத்தார்.

அல் நஜாவிளையாட்டு கழகத்தினை கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக சிறப்பாக வழிநடத்தி எதிர்கால தலைமுறையினரை தலைமைத்துவ ஆளுமை மிக்கவர்களாக வழிநடத்தும் பணியை செவ்வனே மேற்கொள்ளும் உபதலைவர் எஸ்.எம். இத்ரீஸ் மாற்றத்துக்கான முன்னணியினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

றிசாத் ஏ காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# இந்தியாவின் மிக முக்கியமான பகுதி அருணாச்சலப் பிரதேசம்



இந்தியாவின் அருணாச்சல பிரதேச சட்டசபையில் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி திரவுபதி முர்மு சிறப்புரையாற்றியுள்ளார். அவர் அங்கு உரையாற்றிய போது அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் மிகவும் முக்கியமான பகுதி என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



## இறைமையை ஒருபோதுமே இந்தியா விட்டுக் கொடுக்கப் போவதில்லை; சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்க இராணுவம் தீவிர பாதுகாப்பு



அருணாச்சல பிரதேச சட்டசபையில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு

"அருணாச்சல பிரதேசம் நமது இந்திய நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி. ஆனால் சீனா அருணாச்சலப் பிரதேசத்தை தமது நாட்டின் ஒரு பகுதி என அவ்வப்போது குரல் எழுப்புகிறது. நமது மத்திய அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள் அருணாச்சல பிரதேசப் பக்கம் சென்றாலே எதிர்ப்புக் குரல் எழுப்புவது சீனாவின் வாடிக்கையாகி விட்டது" என்று இந்திய ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

அருணாச்சலப் பிரதேச சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், "ஒழுங்கும், கண்ணியமும் நாடாளுமன்ற நடைமுறையின் சிறப்பு அம்சங்களாகும். அருணாச்சலப் பிரதேச சட்டப்பேரவை, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயரிய தரத்தை பராமரித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. சட்டப்பேரவையின் இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கான உயரிய தரத்தை பராமரித்து வருவது பாராட்டத்தக்கது" எனக் கூறினார். "இன்றைய யுகத்தில் சுற்றுச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம் ஆகியவை முக்கிய விஷயங்களாகும். இத்தகைய சிக்கல்களுக்கு விரைந்து தீர்வுகளை நாம் கண்டறிய வேண்டும். அருணாச்சலப் பிரதேசம் போன்ற புவியியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலத்திற்கு இந்த விஷயங்கள் மிகவும் முக்கியமானவை ஆகும். இந்த விஷயத்தில் மாநிலத்தின் கொள்கை வகுப்பாளர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று கூறினார்.

"பருவநிலை மாற்றப் பிரச்சினைக்குத் தீர்வு காண அருணாச்சலப் பிரதேசம் உறுதி பூண்டுள்ளது. மற்றைய மாநிலங்களும் இதே போன்ற முறையைப் பின்பற்றி பருவநிலை மாற்ற பிரச்சினைக்குத் தீர்வு காண முயல வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

கடந்த 2022 ஆம் ஆண்டை மின்நிர்வாக ஆண்டாக மாநில அரசு அறிவித்ததையும், பல்வேறு மின் நிர்வாக திட்டங்களை தொடங்கியதையும் அவர் பாராட்டிப் பேசினார். இந்தத் திட்டங்கள் நிர்வாக சீர்திருத்தங்களுக்கு உதவுவதுடன் மட்டுமல்லாமல், சாதாரண மக்களின் வாழ்க்கையை எளிதாக்க பெரிதும் பங்களிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் இலவசமாக சட்டப்பேரவை நூலகத்தை அணுகலாம் என்ற நடைமுறை மகிழ்ச்சி அளிப்பதாக குடியரசுத் தலைவர் கூறினார்.

'உங்களது சட்டப் பேரவையை தெரிந்து கொள்ளுங்கள்' என்ற முயற்சியின் கீழ், சட்டப்பேரவை இயங்குவது குறித்து தெரிந்துகொள்ள மாணவர்களை அழைப்பதை அவர் பாராட்டினார். இளம் தலைமையினர் இத்தகைய வசதிகளை பயன்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கும், மாநில நலனுக்கும் பங்களிப்பார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் எப்போதும் மாநில வளர்ச்சிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் பாடுபட வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்ப்பதாகவும் மாநிலத்தின் முன்னேற்றத்தில் உயர் கொள்கை வகுப்பாளர்களான சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார்.

"இந்திய நாட்டில் ஒட்டுமொத்தமாக அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஒவ்வொரு துறையிலும் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும். அருணாச்சலப் பிரதேச சட்டப்பேரவை உட்பட அனைத்து மாநில சட்டப்பேரவைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்பதுடன், மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த இதர அமைப்புகளிலும் இந்தநிலை ஏற்பட வேண்டும். அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவில் மிக முக்கியமான பகுதி என்பதுடன், இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையின் பெரும் பங்குதாரர் ஆகும்.

வீதி, ரயில், விமானப் போக்குவரத்து அதிகமில்லாத காரணத்தால் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் வடகிழக்குப் பிராந்தியத்தில் நீண்ட நாட்களாக இல்லாத நிலை நிலவியது. ஆனால் தற்போது மத்திய அரசு வடகிழக்குப் பகுதியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. அருணாச்சலப் பிரதேசத்தில் தற்போது முன்னேற்றம் பிரகாசமாக ஒளிர்வது மகிழ்ச்சி அளிக்கிறது"என்று அவர் குறிப்பிட்டார்.

செழுமையான இயற்கை வளங்கள், தரமான மனிதவளம் ஆகியவற்றுடன் அருணாச்சலப் பிரதேசம் முதலீட்டை ஈர்ப்பதற்குரிய இடமாக மாறி வருவதுடன், வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மையமாகவும் திகழ்கிறது என்று இந்திய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தப் பிராந்தியத்தின் மக்கள், தங்களது வேர்களில் இருந்து விடுபட்டுவிடாமல் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வதை, இந்தப்பிராந்தியத்தின் பாரம்பரியம்,கலாசாரம், விழுமியங்களை மேம்படுத்தி பாதுகாப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இது ஒருபுறமிருக்க அருணாச்சலப் பிரதேசத்தில் சீனாவின் அச்சுறுத்தல் உள்ள போதிலும், இந்தியா அங்கு இராணுவப் பாதுகாப்பை பலப்படுத்தி வைத்துள்ளது.இந்திய எல்லைகளில் சீனா தனது இராணுவத் துருப்புகளை குவித்துள்ள நிலையில், அருணாசலப் பிரதேசத்தில் இந்திய ராணுவம் தீவிர போர்ப் பயிற்சியில் அடிக்கடி ஈடுபட்டு வருகிறது.

அருணாச்சலப் பிரதேச எல்லையில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. இந்தியா தனது இறைமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்பது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்தின் உறுதியான கொள்கையாக உள்ளது.

எல்லையிலுள்ள லடாக்கில் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் சீன இராணுவம் அத்துமீறி நுழைந்தது தொடக்கம் இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது. தொடர் இராணுவ நடவடிக்கைகள், பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னரே லடாக்கின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து சீன இராணுவம் தனது துருப்புகளை வாபஸ் பெற்றது. இருந்தபோதிலும், லடாக்கின் சில பகுதிகளில் இருந்து திரும்பிச் செல்ல சீன இராணுவம் மறுத்து வருகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக அந்நாட்டுடன் இராஜாங்க ரீதியிலான பேச்சுவார்த்தையை இந்தியா நடத்தியிருந்தது.

அருணாச்சலப் பிரதேசத்தைக் குறிவைத்து அண்மைக் காலமாக சீனா தனது காய்களை நகர்த்தி வருகிறது. அருணாச்சல பிரதேசத்தை நீண்டகாலமாக உரிமைக் கொண்டாடி வரும் சீனா, அதையொட்டிய எல்லைப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை பல மடங்கு அதிகரித்துள்ளது. இராணுவத் தளங்கள், போர் விமானங்கள் வந்து இறங்குவதற்கான ஓடுதளங்கள், பெரிய அளவிலான மேம்பாலங்கள் உள்ளிட்டவற்றை சீனா அமைத்துள்ளது. அதுமட்டுமல்லாமல், இதுவரை இல்லாத அளவுக்கு அருணாச்சலப் பிரதேசத்தை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் தனது இராணுவப் படைகளை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஆனாலும் சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில் இந்தியா தனது எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றது. அருணாச்சல பிரதேசத்தில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரிப்பதை உணர்ந்த இந்தியா, அந்த பிராந்தியத்தில் அண்மைக்காலமாக தனது இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. மேலும் அருணாச்சல பிரதேச எல்லையில் தீவிர போர்ப் பயிற்சியில் இந்திய இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஏவுகணை தாக்குதல் நடத்துவது, மலைகளை தாண்டி வரும் எதிராளிகளை அங்கேயே வீழ்த்துவது, நவீன பீரங்கிகளை கையாள்வது உள்ளிட்ட பயிற்சிகளில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல, அருணாச்சலப் பிரதேசத்தில் அதிக அளவிலான இராணுவ வீரர்களையும் இந்தியா நிறுத்தியுள்ளது. ஒருவேளை, சீனா அந்தப் பகுதியில் அத்துமீறலில் ஈடுபட்டால் அதனை சமாளிக்க தமது ராணுவ வீரர்கள் தயார் நிலையில் இருப்பதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இஸ்ரேலின் இராணுவ அச்சுறுத்தலை தடுப்பதற்கு ஈரான் நிர்மாணித்த நிலத்தடி வான்தளம் –ஈகிள் 44!

கடந்த 1979 ஆம் ஆண்டு இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சியின் 44 ஆவது ஆண்டு நிறைவை ஈரான் அனுஷ்டிக்கும் வேளையில் , அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அதிகரித்த அச்சுறுத்தல் மத்திய கிழக்கில் மேலும் பதற்றங்களுக்கு வித்திட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்காவோ, இஸ்ரேலோ அதிரடித் தாக்குதல்கள் எதனையும் தொடுக்குமா என வியந்து கொண்டிருக்கும் வேளையில், அண்மையில் ஈரான் இராணுவ தொழிற்சாலை மீது ட்ரோன் (Drone Attack) தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டது.

இஸ்பாஹானில் உள்ள ஈரானின் பாதுகாப்பு அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட இராணுவ தொழில் தளத்தை ட்ரோன் தாக்குதல் இலக்காகக் கொண்டது. பின்னர் அது இஸ்ரேல் மீது குற்றம் சாட்டப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில ஈரான் வல்லாதிக்க அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள கங்கணம் கட்டியுள்ளது.

ஈரான் தங்கள் வான் வல்லமையை முதன் முதலாக உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில், போர் விமானங்களுக்கான முதல் நிலத்தடி இராணுவ தளத்தை (Underground Air Base) திறக்கும் போது ஈரானிய இராணுவத்தின் தளபதி மேஜர் ஜெனரல் அப்தோல்ரஹிம் மௌசவி பேசுவதைக் காட்டும் தகவல்களை AFP வழியாக ஈரானிய இராணுவ அலுவலகம் வெளியிட்டுள்ளது.

நீண்டதூர ஏவுகணைகளுடன் கூடிய ஜெட் விமானங்களுடன் நிலத்தடி விமானத் தளத்தைப் பற்றி முதன் முதலாக ஈரான் வெளிப்படையாக அறிவித்துள்ளது.

ஈரானிய இராணுவத்தின் முதல் நிலத்தடி விமானப்படைத் தளமான 'ஈகிள் 44' அண்மையில் திறக்கப்பட்டது என்று மாநில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



அரசு செய்தி நிறுவனமான IRNA இந்த தளத்தை 'விமானப்படையின் மிக முக்கியமான விமான தளங்களில் ஒன்று' என்று விபரித்தது. நீண்ட தூர ஏவுகணைகள் அந்தப் போர் விமானங்களில் பொருத்தப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பபட்டுள்ளது.

இந்த தளத்தின் முக்கிய சிறப்பியல்பு மலைகள் மற்றும் பூமியின் ஆழத்தில் அதன் இருப்பிடமாகும், இது போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்களை சேமித்து இயக்கும் திறன் கொண்டது என்று ஐ.ஆர்.என்.ஏ கூறியுள்ளது.

இந்தத் தளம் சமீப ஆண்டுகளில் ஈரான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தின் விமானப்படைக்காக கட்டப்பட்ட பல தந்திரோபாய நிலத்தடி விமான தளங்களில் ஒன்றாகும் என்று IRNA தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தங்கள் சமீபத்திய இராணுவப் பயிற்சியில் அச்சுறுத்தி உருவகப்படுத்தியது போன்ற சாத்தியமான தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் வகையில் போர் விமானங்களை ஈரான் தயார்படுத்தி வருவதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



ஈரானின் இராணுவத் தலைவர், மேஜர் ஜெனரல் அப்தோல்ரஹிம் மௌசவி மற்றும் ஈரானிய ஆயுதப் படைகளின் தலைமை அதிகாரி, மேஜர் ஜெனரல் முகமது பாகேரி ஆகியோர் ஈரானில் வெளியிடப்படாத இரகசிய இடத்தில், 'ஈகிள் 44' எனப்படும் முதல் நிலத்தடி விமானப்படை தளத்தை பார்வையிட்டனர். ஆயினும் இத்தளத்தின் இருப்பிடம் வெளிஉலகிற்கு இதுவரை வெளியிடப்படவில்லை.

1979ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியின் 44 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் அதிகரித்த பதற்றங்களுக்கு மத்தியில் இந்த நிலத்தடி வான்தள தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஈரானின் விமானப்படையானது 1979 புரட்சிக்கு முன்பிருந்த பல்வேறு அமெரிக்க தயாரிக்கப்பட்ட இராணுவ விமானங்களையும், ரஷ்ய தயாரிப்பான மிக் மற்றும் சுகோய் விமானங்களையும் கொண்டுள்ளது.


கடந்த மே மாதம், ஈரான் நாட்டின் மேற்கில் மற்றொரு நிலத்தடி ட்ரோன்களை தயாரிப்புக்களையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியது. இந்த ட்ரோன்களை உக்ரேனிய போரில் ரஷ்யா பயன்படுத்தியதாக மேற்குலகு குற்றஞ்சாட்டியது.

ஈரான் தன் வான்படை வல்லமையை வலுப்படுத்த மேலும் ரஷ்ய சுகோய் சு35 போர் விமானங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை மார்ச் மாதத்திற்குள் பெற உள்ளதாக அறிவித்துள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# அவுஸ்திரேலியக் கதைகள் 'தைலம்' சென்னையில் நூல் வெளியீட்டு அரங்கு

அவுஸ்திரேலியா இலக்கிய படைப்பாளிகள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'தைலம்' நூலின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.




சென்னை மேற்கு கே.கே. நகரில் அமைந்த டிஸ்கவரி புக்பேலஸ் பிரபஞ்சன் அரங்கத்தில் (1055 B , முனுசாமி சாலை – மேற்கு கே. கே. நகர் – சென்னை 78) கவிஞர் தாமரை பாரதி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அறிமுகவுரையை இலங்கையிலிருந்து வருகை தந்து கலந்து கொண்ட எழுத்தாளர் கருணாகரனும், நூல் விமர்சன உரைகளை கவிஞர்கள் வேல்கண்ணன், கவிஞர் சாம்ராஜ் ஆகியோரும், அவுஸ்திரேலியாவிலிருந்து கலந்து கொண்ட 'தைலம்' நூலின் தொகுப்பாளர் எழுத்தாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஏற்புரையையும் நிகழ்த்தினர்.

அம்பிகா குமரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

அண்மையில் வெளியான இயக்குநர் மணிரத்தினத்தின் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தின் பாடலாசிரியர் கவிஞர் இளங்கோ கிருஷ்ணன் இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தினார்.

கலை, இலக்கிய ஆர்வலர்கள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

**லெ.முருகபூபதி...**
*அவுஸ்திரேலியா.*

# பின்தங்கிய மாணவர் கல்வி மேம்பாட்டுக்கு கல்முனை ரோட்டரி கழகம் வழங்கிய உதவி

மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக கல்முனை றோட்டரிக் கழகம் ஐந்து பாடசாலைகளுக்கு 38 இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை வழங்கியது. இந்நிகழ்வு ரோட்டரி கழகத்தின் தலைவர் றோட்டரியன் விஜயரட்ணம் விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் தலைவர்களான எஸ்.புஷ்பராசா, ரி. சுபராஜன் மற்றும் பொருளாளர் மு. சிவபாதசுந்தரம், ரோட்டேரியன் மு.அமிர்தசங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வலயக்கல்விப் பணிமனையின் சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜாவும் கலந்து சிறப்பித்தார்.





கல்முனை ரோட்டரி கழகத்தின் இவ்வேலைத்திட்டத்திற்காக 3.86 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன், பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலயம் தொடக்கம் பொத்துவில் அல்மினார் வித்தியாலயம் வரை 32 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு 3908 மாணவர்களுக்கு 19534 அப்பியாசக் கொப்பிகள், 242 பாதணிகள், 701 பாடசாலைப் பைகள், ஒரு போட்டோ பிரதி இயந்திரம் உட்பட ஏனைய சில உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியினை அவுஸ்ரேலியா, கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் ரோட்டரி கழகம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை வலயத்திலுள்ள ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம், மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயம், வளத்தாப்பிட்டி அ த க பாடசாலை. திருவானூர் விவேகானந்த மகா வித்தியாலயம் மற்றும் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

## முஜிபுர் ரஹ்மானை... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர். அதனால் அவரைப் பாதுகாக்க முயன்றேன். ஆனால், அவரை அவரது கட்சியினரே பலி கொடுத்து விட்டனர் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற தெரிவுக் குழு... (03ஆம் பக்கத் தொடர்)

சபாநாயகர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (24) நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது, விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட்டு தெரிவுக் குழுக்களுக்கான நியமனங்கள் இடம்பெறும் வேளை, அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களுக்கு முறையான பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறுவதில்லை.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய அரசியல் கட்சிகள் மாத்திரம் எதிர்க்கட்சிகளல்ல. அரசாங்கத்திலிருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் நாங்களும் எதிர்க்கட்சிகள்தான். ஆகவே, நியமிக்கப்படும் தெரிவுக் குழுக்களுக்கு எமக்கும் பிரநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

சர்வதேச மட்டத்திலான பாராளுமன்றக் குழுக் கூட்டங்கள் அண்மையில் இடம்பெற்றன. இருப்பினும், இந்தக் கூட்டங்களில் எங்களின் பிரநிதித்துவம் இல்லை. பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடனும் முறையாகவும் நாங்கள் ஈடுபடுகிறோம். ஆகவே, எமக்கு முறையான அங்கிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

## பிக்கு மாணவர்களின்... (03ஆம் பக்கத் தொடர்)

பல்கலைக்கழகமல்ல. உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள பல்கலைக்கழகங்கள் உள்ளன. பௌத்த பாளி பல்கலைக்கழகத்துக்கு மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்ப்பது போன்று இசற் புள்ளி பார்ப்பதில்லை. அதற்கான முறை வேறானது. இது விசேட விடயங்களை கொண்டு தனியான சட்டமூலத்தினூடாக அமைக்கப்பட்டது.

இப்போது பௌத்த பாளி பல்கலைக்கழகம் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு இருக்கையில் அந்தப் பல்கலைக்கழகத்துக்கருகில் பிரச்சினையொன்று ஏற்பட்டது. அதனை தொடர்ந்து வியாழக்கிழமை இவர்கள் கல்வி அமைச்சுக்கு வந்தனர். இதில் சூழ்ச்சியான சக்திகள் உள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது ஆசிரியர் இடமாற்ற சபை கூட்டத்தில் கலந்துகொண்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அதன்போது நான் சம்பந்தப்பட்டவர்களை தொடர்புகொண்டு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தேன். அமைச்சர் என்ற ரீதியில் எனது கடமையை செய்துள்ளேன் என்றும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மக்களின் வசதிக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

மேற்கொண்ட கள ஆய்வுப் பயணத்தின் பின்னரே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு தினமும் ஏராளமான மக்கள் வருகை தருகின்றனர். அவர்கள் அமர்வதற்கு போதிய இருக்கைகள் இல்லாததால், மரங்களின் கீழ், சுவர்களுக்கு மேலும் வீதிகளிலும் அமர்ந்து விடுகின்றனர். இதற்கு தீர்வாக அந்த இடத்தில் பொதுமக்கள் அமர்வதற்கு இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## கடவுச்சீட்டுக்கள் பலவற்றை... (03ஆம் பக்கத் தொடர்)

வங்கிக் கணக்கினூடாக பலரிடம் பணக் கொடுக்கல், வாங்கலில் ஈடுபட்டமையும் தெரியவந்துள்ளது. இதேவேளை, இக்கடவுச்சீட்டுகளின் சொந்தக்காரர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டதுடன், அவர்கள் அனைவரும் நற்பிட்டிமுனையைச் சேர்ந்தவர்களெனவும், பொலிஸார் தெரிவித்தனர். மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புக்காக தமது கடவுச்சீட்டுகளை அந்த நபரிடம் வழங்கியதாகவும் அதற்காக அவரது வங்கிக் கணக்குக்கு பெருந்தொகை பணத்தை வைப்பிலிட்டதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரிடமும் வாக்குமூலங்களை பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர். கைதான நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நபர்களை அனுப்புகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரா? அல்லது இடைத்தரகரா? என்பது தொடர்பாக, கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மிளகாய்த்தூள் வீசி... (03ஆம் பக்கத் தொடர்)

தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளார். இந்தச் சம்பவத்தின் போதுசந்தேகநபரால்அபகரிக்கப்பட்ட தங்க நகைகளில் ஒன்று அங்கிருந்த பாத்திரத்தில் கிடந்ததாக தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டள்ளனர்.

## புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

வழங்கப்பட்டது. புற்றுநோயாளர்களினது மருத்துவத் தேவைகளை முன்னிலைப்படுத்தி விரைவானதும் பாதுகாப்பானதுமான மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காகவும் சிகிச்சை விடுதிகளில் ஒட்சிசன் தேவையை மேம்படுத்துவதற்காகவும் லயன்ஸ் கழகத்தினரால் இவை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## வலையமைப்பு தொடர்பில்... (03ஆம் பக்கத் தொடர்)

உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நேற்று முன்தினம் (23) கூடியபோதே, இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. இந்தக் குழுக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டம் உள்ளிட்ட ஏனைய வேலைத்திட்டங்களூடாக நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, இந்த நிவாரணங்களை குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு முறையாக வழங்குவது தொடர்பில் முறைமையொன்றை தயாரிப்பது பற்றி வருகை தந்தவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## நட்புறவுச் சங்க தலைவராக... (03ஆம் பக்கத் தொடர்)

ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இலங்கை ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் இரு நாடுகளுக்கும் இடையில் பல தசாப்தங்களாக நிலவும் நல்லுறவை மேலும் மேம்படுத்தும் என இங்கு உரையாற்றிய சபாநாயகர் தெரிவித்தார். ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வாழ்த்தைத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இந்த நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இரு நாட்டுப் பாராளுமன்றங்களுக்கிடையிலான உறவுகளையும் பலப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பாதுகாப்பு உறவை...

இரு நாடுகளும் தங்களது அனுபவங்களையும் திறன்களையும் பகிர்ந்துகொள்ள முடிவு செய்யப்பட்டது. இப்பேச்சுவார்த்தை ஆரோக்கியமான முறையில் நடைபெற்றதற்காக ஜெனரல் கமல் குணரட்ண மற்றும் அவருடைய பிரதிநிதிகளுக்கு, கிரிதர் அரமானே நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பேச்சுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பொதுவான ஒப்பந்தங்களின் அடிப்படையில் இப்பேச்சுகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளை மேலும் வலுப்படுத்தவும் இந்தியாஇலங்கை ஒப்புக்கொண்டதாக, அவர் தெரிவித்தார்.

## நீர் கட்டணம் செலுத்தாததால்...

கட்டணத்தை வீட்டு நீர் பாவனையாளர்களே செலுத்த வேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்தப்படாமையால் சபையின் நடவடிக்கைகளை உரியவாறு முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## 8 ரிச்டர் அளவில்...

பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளதாகவும், பேராசிரியர் அத்துல சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

## வருடம் முழுவதும் சுற்றுலாத் தளமாக...

வர்த்தகர்களுடன் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சுற்றுலாத் துறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் "சுற்றுலாத் துறையின் இருப்பு மற்றும் சவால்களை வெற்றி கொள்ளல்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு, ஹிக்கடுவை சிட்ரஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அண்மைய பொருளாதார வீழ்ச்சியினால், சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவற்றை வெற்றி கொண்டு, சுற்றுலாத் துறையை புத்துயிர் பெறுவதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

20 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கும் ஒரு சுற்றுலாப் பயணி, நாளொன்றுக்கு 500 டொலர்களை செலவிடக்கூடிய வகையில், சுற்றுலாப் பயணிகளுக்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் உடனடியாக இவை நடைமுறைப்படுத்தப்படும் என்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை தொடர்பில் சிறந்த பிரச்சாரம் ஒன்றை உலகுக்கு கொண்டு செல்ல வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை உலகுக்கு எடுத்துரைக்கும் வகையில் இவ்வருட சுதந்திர தின விழா பெருமையுடன் நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களின் பின்னர் சுற்றுலாப் பயணிகள் இலங்கையிலிருந்து விலகியிருந்ததாகவும், அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இலங்கையில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ள செய்தியை உலகுக்கு எடுத்துச் செல்வது அவசியமானதென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, சம்பத் அத்துகோரள, தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே, காலி மாவட்ட செயலாளர் சாந்த வீரசிங்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஹிக்கடுவை நகருக்கு நடந்து சென்ற ஜனாதிபதி, அங்குள்ள வர்த்தகர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

வர்த்தக நிலையங்கள் சிலவற்றுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, வர்த்தக விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்தார். அங்கு ஜனாதிபதிக்கு வர்த்தகர்களின் அமோக வரவேற்பும் கிடைத்தது.

ஜனாதிபதியொருவர் தமது வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்து, பிரச்சினைகளை ஆராய்ந்தது இதுவே முதல் தடவை என்றும், அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஹிக்கடுவை நகரில் கூடியிருந்த மக்களின் விபரங்களையும் ஜனாதிபதி இதன்போது கேட்டறிந்தார்.

## வசந்த முதலிகே...

அத்துடன், கல்வி அமைச்சின் சொத்துக்களுக்கு ஒரு இலட்சத்து தொண்ணூற்றாயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக, பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுக்காக சட்டத்தரணிகளான கமல் விஜேசிறி நுவன் போபகே நுவன் ஜயவர்த்தன ஜெயானந்த சமரகோன் உள்ளிட்ட 40 பேர் கொண்ட சட்டத்தரணிகள் குழு ஆஜராகியிருந்தது.

கால வரையறையின்றி மூடப்பட்டுள்ள பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை மீளத் திறக்குமாறு வலியுறுத்தி கல்வி அமைச்சுக்குள் நுழைந்த பௌத்த தேரர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அவர்கள் அமைச்சுக்குள் கல்வி அமைச்சரின் அலுவலகத்துக்கு வெளியில் அமர்ந்து பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது, அங்குள்ள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர் நெலுவே சுமனவன்ச தேரர், பெப்ரவரி 27ஆம் திகதி முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக பல்கலைக்கழகம் திறக்கப்படுமென்று தெரிவித்தார்.

அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் பல்கலைக்கழகத்தை திறப்பது சாத்தியமில்லையென தெரிவித்த தேரர், பல்கலைக்கழகத்தை கட்டம் கட்டமாக திறக்க நிர்வாக சபை ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். எனினும், அவரது அந்த அறிவிப்பையும் பொருட்படுத்தாது, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட பௌத்த பிக்குகள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், கல்வி அமைச்சுக்குள்ளும் அத்துமீறி நுழைந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோபா குழு புதிய...

இதன்போது, லசந்த அழகியவண்ணவின் பெயரை இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர முன்மொழிந்ததுடன், இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் வழிமொழிந்தார்.

அத்துடன், கோபா குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீமின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் லசந்த அழகியவண்ணவுக்கு 14 வாக்குகளும், கபீர் ஹஷீமுக்கு 07 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய, புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டார்.

2004 முதல் பல குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தனக்கு பரந்த அனுபவம் உள்ளதாகவும், இந்தக் குழுவில் கட்சி பேதமின்றி சுயாதீனமாக நாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய கடமைகளை நிறைவேற்ற எதிர்பார்ப்பதாகவும் அதற்காக குழு உறுப்பினர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் புதிய தலைவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, பாராளுமன்ற வரலாற்றில் பழைமையான குழுவாக 2023 ஒக்டோபர் அளவில் 100 வருடங்களை பூர்த்தி செய்வதாக தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் நிதிக் கட்டுப்பாடு காணப்படும் பாராளுமன்றத்தினால் வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றியதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றம் சார்பில் கண்காணிப்பை மேற்கொள்வது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு என்பதால், பாராளுமன்ற சபைக்கு காணப்படும் பொறுப்புகளுக்கு சமமான பொறுப்புகள் இந்தக் குழுவுக்கும் காணப்படுவதாக, அழகியவண்ண மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, பிரசன்ன ரணவீர, காதர் மஸ்தான், கலாநிதி சுரேன் ராகவன், டயனா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, வஜிர அபேவர்த்தன, ஏ.எல்.எம்.அதாஉல்லா, கபீர் ஹஷீம், மனோ கணேசன், கலாநிதி சரத் வீரசேகர, நிரோஷன் பெரேரா, ஜே.சி.அளவதுவள, வடிவேல் சுரேஷ், அசோக் அபேசிங்க, ஜயந்த கெடகொட, ஹெக்டர் அப்புஹாமி, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட, இசுறு தொடங்கொட, சஹன் பிரதீப் விதான, டி.வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சமுர்த்தி கொடுப்பனவு...

புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் என அறிமுகப்படுத்திக் கொண்டு, வீடுகளுக்குள் சென்று சமுர்த்தி உதவிகளை பெற பதிவு செய்ய வேண்டாமெனவும் அதற்காக பணம் செலுத்த வேண்டாமெனவும் கூறி 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரையில் பெற்று மோசடி செய்துள்ளார்.

அப்பகுதிகளிலுள்ள வீடுகளில் பிள்ளைகள் வேலைகளுக்கு சென்ற பின்னர், வீடுகளில் தனித்திருக்கும் முதியவர்களை இலக்கு வைத்து வீடுகளுக்குள் சென்று ஏமாற்றி பணம் பெற்றுள்ளார்.

சிலர் அது தொடர்பில் பிள்ளைகளுடன் பேசி பணம் வாங்க வேண்டாமெனக் கூறிய போது , தொழிலுக்குச் சென்ற பிள்ளைகளை தொந்தரவு செய்ய வேண்டாம். நான் நாளை வருகிறேனெனக் கூறி அங்கிருந்து நழுவிச் சென்றுள்ளார். சில வீடுகளில் தம்மிடம் அவ்வளவு தொகை இல்லை என்றவர்களிடம், உங்களிடம் உள்ளதை தற்போது தந்து பதிவுகளை மேற்கொள்ளுங்கள், மிகுதியை நான் நாளைக்கு வாங்குகிறேன். இல்லையெனில், எனது அலுவலகத்துக்கு வந்து மிகுதியை தாருங்கள் என கூறி பணத்தை பெற்றுள்ளார்.

அத்துடன் 'சமுர்த்தி கொடுப்பனவு" என விண்ணப்பப்படிவம் ஒன்றினையும் வழங்கி அதனை பூரணப்படுத்தி, அவர்களிடம் கையொப்பமும் வாங்கியுள்ளார். இம்மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

## தெற்கு அதிவேக...

இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அக்மீமன பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிவிவகார அமைச்சர்...

குறிப்பிட்ட சில நாட்களாக குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. வட பகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக வரும் போது, எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.இதற்கான நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரு நாடுகள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தி தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், நிதி இல்லை என்பதால் நெல்லை கொள்வனவு செய்ய முடியாதென தற்போது குறிப்பிடப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்த போது, நெல்லுக்கான உத்தரவாத விலையை 100 ரூபாவாக நிர்ணயிப்பதாக குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் சம்பா நெல்லை தற்போது கொள்வனவு செய்வதில்லை. இதனால் தனியார் வர்த்தகர்கள் 5,500 முதல் 6,000 ரூபாவுக்கு மாத்திரமே கொள்வனவு செய்கின்றனர். இதனால் ஒரு மூடைக்கு 3,000 ரூபா வரை விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுகிறது. எனவே, சம்பா நெல்லை கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சராக, நகர சபை...

அதாவுட செனவிரத்ன, திஸ்ஸ ஆர்.பலல்ல ஆகியோருக்கான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும்போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

மறைந்த அப்துல் பயாஸ் கமால்டீன் புத்தளம் மாவட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக பாராளுமன்றத்திற்கு பிரவேசித்தார். சவால்களுக்கு மத்தியில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவரிடம் இருந்த அனுபவம் மற்றும் திறமை அளப்பரியது. அமைச்சராக பதவி வகித்து எம்மோடு இணைந்து குறிப்பிடத்தக்க சேவைகளில் ஈடுபட்டுள்ளார்.அவர் பின்னர் புத்தளம் நகர சபை முதல்வராகவும் அரிய பணியாற்றியுள்ளார். நகர முதல்வர் பதவியிலிருந்து அப்பகுதி மக்களுக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தினார்.

## 'பும்மா'வின் சகா...

அவர், கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி கொட்டாஞ்சேனை, கல்பொத்த பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர், இவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாட்டை விற்பதோ,...

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நாடுகள் தொடர்பில் சூழ்ச்சிகள் என்பது எல்லாக் காலங்களிலும் நிகழ்கின்ற ஒன்று. எனினும் அவற்றில் அகப்படாதவாறு நாம் எமது நாடு தொடர்பில் கவனம் செலுத்தி நாட்டை முன் கொண்டு செல்வதில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாசுதேவ நாணயக்கார எம்.பி. ஓர் ஊகிப்பை அடிப்படையாகக் கொண்டே மேற்படி சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைக் கொண்டு வந்துள்ளார். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும், பொது நலவாய கொள்கைகளை முறையாக நாம் கடைப்பிடித்தாலும் அதற்காக நாடுகளுடனான தொடர்பை தவிர்த்து செயற்பட முடியாது.

எமது நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

நாம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் பாதுகாப்புத் தொடர்பில் மட்டுமன்றி பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகள் சம்பந்தமான தொடர்புகளையும் முன்னெடுத்துச் செல்வது அவசியமாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 7,000 அரச ஊழியர்களை...

கலந்துரையாடி, அவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அது தொடர்பில் அமைச்சரவை மூலம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதென்றும் எஸ்.பி.திசாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து அது தொடர்பில் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எம்.பி., உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 07 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். அவர்களுக்கான சம்பளம் கிடைப்பதில்லை.

பல கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களிலிருந்து இவர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வகையில், தேர்தல் தொடர்பான முடிவு வரும் வரை காத்திருக்காமல், அவர்களுக்கு நிவாரணம் ஒன்று வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அது தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜயசுமனவும் இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க நிதிக்குழு...

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஹர்ஷ டி சில்வா தொடர்ந்தும் அந்த தெரிவுக் குழுவின் தலைவராக இருக்க வேண்டுமென்று எங்கும் சட்டம் கிடையாது.

இதற்கு முன்னர் அவர் தலைவராக இருந்தாலும், இப்போது புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தலைவர் நூற்றுக்கு நூறு சட்டப்படியே நியமிக்கப்பட்டுள்ளார் என்பதால் அதில் மாற்றம் கிடையாது. அது தொடர்பில் எதிர்க்கட்சி, பிரச்சினைகளை எழுப்புவதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. எந்த வகையிலும் எதிர்க்கட்சித் தலைவர் தான் அதற்கான பெயரை தெரிவு செய்ய வேண்டும் என்று எந்தச் சட்டமும் கிடையாது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே அதற்கு நியமிக்கப்பட வேண்டும் என நியதி உள்ளதால், அவ்வாறே இடம்பெற்றுள்ளது. அதில் எந்த பிரச்சினையும் கிடையாது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபைத்...

ஆணைக்குழு அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்துள்ளார். அத்தோடு, உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு நிதியை வழங்குமாறு வலியுறுத்துவதில் தலையிடுமாறு சபாநாயகரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா, அதன் உறுப்பினர்களான எஸ்.பி.திவாரத்ன, எம்.எம்.முகமது மற்றும் கே.பி.பி.பத்திரன ஆகியோர் இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி விண்ணப்பங்கள்...

தலா 04 இலட்சம் ரூபா பணத்தை சந்தேக நபர் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

குளியாப்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது தெரியவந்த தகவலின் அடிப்படையில், அத்துருகிரிய பிரதேசத்தை சேர்ந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டதாக, அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருவரையும் கடுவெல நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர், சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.




# சப்ரகமுவ பல்கலையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் மாணவர்கள் வெளியேற வேண்டும்

## சப்ரகமுவ பல்கலைக்கழக துணை வேந்தர்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சப்ரகமுவ பல்கலைக்கழக வளவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் அனைத்து மாணவர்களும் உடனடியாகப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேற வேண்டுமென பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உதய ரத்னாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்கள் சிலர் சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைக்குட்படுத்தப்பட்டமையால் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து கடந்த 16 ஆம் திகதி முதல் காலவரையறையின்றி பல்கலைக்கழகம் மூடப்பட்டது.




எனினும் இவ்வுத்தரவை பல்கலைக்கழகத்தின் பெரும் எண்ணிக்கையான சிரேஷ்ட மாணவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவருவதுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்புரைகளை ஏற்காது பலாத்காரமாக தங்கியுள்ளனர்.

எனவே பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகள மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் தற்போது பலாத்காரமாகத் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக வளவிலிருந்து வெளியேற வேண்டுமென பல்கலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்து வருகிறது.

# நுவரெலிய நகரங்களில் முட்டை தட்டுப்பாடு



நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, மற்றும் உடப்பு சல்லாவை ஆகிய பிரதான நான்கு நகரங்களில் கடந்த இரண்டு தினங்களாக முட்டைக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வெதுப்பகங்கள், ஹோட்டல்களில் முட்டைகள் பாவித்து செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் வெதுப்பி உணவு வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணய விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படும் போதிலும் முட்டைகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்நிலையில் நுகர்வோரும் தங்களது வீட்டு சமையலுக்கு முட்டைகள் பெற்றுச் செல்வதில் சிரமப்படுகின்றனர். அதேநேரத்தில், இராகலை மற்றும் உடபுசல்லாவ பிரதான நகரங்களில் ஒரு சில சில்லறை கடைகள் மற்றும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்களில் வெள்ளை நிற முட்டை ஒன்று 55 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இருப்பினும் வெள்ளை முட்டை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது தொடர்பில் நுவரெலியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# மருத்துவமனைகளுக்கு ஜப்பான் அரசு 46 மில்லியன் டொலர் நிதியுதவி

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவிப்பு



அரச மருத்துவமனைகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ள ஆதரவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார். இலங்கைக்கு ஜப்பான் அரசாங்கம் பல்வேறு வழிகளில் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றது. அதன் ஒருகட்டமாக அரச மருத்துவமனைகளுக்கு தமது எரிபொருள் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள 46 மில்லியன் டொலர் நிதியுதவியை ஜப்பான் வழங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கும் உதவிகளுக்கும், அதை விரைவாக முன்னெடுத்த ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கு இ.தொ.கா. நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் கடந்தகாலத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் சேவை பாதிக்கப்பட்டு நோயாளர்கள் பாதிக்கப்பட்டனர். மலையக பகுதிகளில் எரிபொருள் இன்மையால் அம்புலன்ஸ் வண்டிகளில் நோயாளர்களை கொண்டு செல்வதில் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேரிட்டிருந்தது.

ஜப்பான் அரசின் உதவியானது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளுக்கும் மலையக வைத்தியசாலைகளுக்கு மிகவும் பயனுடையதாகவிருக்கும்.

அத்துடன் தொடர்ச்சியாக எதிர்காலத்தில் ஜப்பான் அரசு இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டுமெனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



பலாங்கொடை கல்வி வலயத்துக்குட்பட்ட அல்மினாரா ஆரம்ப பாடசாலையிலிருந்து 2022 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 18 பேர் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களை படத்தில் காணலாம்.

(படம்: பலாங்கொடை தினகரன் நிருபர்)



தேசிய முதியோர் செயலக காரியாலயத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் முதியோருக்கான நடமாடும் வைத்திய சேவை, தெரணியகலை மாகல கனிஷ்ட வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

# உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுக்குள் பேராதனைப் பல்கலைக்கழகமும் தெரிவு

**எம்.ஏ.அமீனுல்லா**

சர்வதேச தரவரிசையில், உலகின் தலைசிறந்த 1000 பல்கலைக்கழகங்களுக்குள் பேராதனைப் பல்கலைக்கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமாவன்ச தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக ஞாபகார்த்த மற்றும் நினைவுப் பொருட்கள் விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் (23) திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய உபவேந்தர்,

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட நினைவுப் பரிசுகள், பொருட்கள், பல்கலைக்கழகச் சின்னங்களுடன் கூடிய அடையாள அட்டைகள் போன்றவை இந்த இடத்தில் விற்கப்படுகின்றன.



புதிய விற்பனை நிலையத்தை திறந்து வைத்து பேசிய உபவேந்தர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

US News & World Report வழங்கும் இந்த தரவரிசையில் சர்வதேச ரீதியில் முதல் 1000 உலகளாவிய பல்கலைக்கழகங்களில் பேராதனைப் பல்கலைக்கழகம் 901ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச தரவரிசையில் ஆராய்ச்சிகள் , வெளியீடுகள், மாநாடுகள், சர்வதேச ஒத்துழைப்பு உள்ளிட்ட 13 துறைகள் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டு இந்த உலகின் தலைசிறந்த 1000 பல்கலைக்கழகங்களில் இலங்கையில் உள்ள ஒரேயொரு பல்கலைக்கழகம் பேராதனைப் பல்கலைக்கழகமாகும். இலங்கையில் இவ்வாறானதொரு பதவியைப் பெற்ற முதலாவது பல்கலைக்கழகம் பேராதனையே எனவும் உபவேந்தர் தெரிவித்தார்.

சுமார் இரண்டாயிரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் முப்பதாயிரம் உயர்கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்தி இந்த தெரிவு இடம்பெற்றுள்ளது.

பதின்மூன்று சிறந்த துறைகள் மூலம் உலகப் பல்கலைக்கழகங்கள் அவற்றின் செயற்பாட்டின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இளங்கலை மாணவர்கள் உட்பட இதற்கு பங்களித்த அனைத்து ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தேயிலைப் பசளைகளின் விலை அதிகரிப்பு சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

நைட்ரஜன் அடங்கிய தேயிலைப் பசளை களின் விலை அதிகரிப்பு காரணமாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இன்றைய பொருளாதார சூழ்நிலையில் அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அதிக தொகைப்பணத்தை செலவிட்டு நஷ்டமடைவதாகவும் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி பசளை இன்றி தேயிலைச்செடிகள் மஞ்சள் நிறமாகி அழிந்து வருவதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே வயல் நிலங்களுக்கு 10000 ரூபாவுக்கு வழங்கும் யூரியா பசளைகளை தமக்கும் வழங்குமாறும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அவ்வாறு இல்லாவிடின் தமது உற்பத்தி பாதிக்கப்படுமெனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# மலையக மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

இன்றைய பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் மனிதநேய உதவிகள் இலங்கைக்கு பெரும் வரப்பிரசாதமாகும் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக செயலாளரும், தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் உப தலைவரும், புலம்பெயர் தொழிலாளர் முன்னணியின் தலைவரும், முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினருமாகிய வேலாயுதம் ருத்திரதீபன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போதே அவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இதன்போது மலையக மக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் எத்தகைய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். என்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. பெண் தலைமைத்துவங்களை விருத்திசெய்தல், மேம்படுத்தல்,இளைஞர் யுவதிகளுக்கான தொழில் அபிவிருத்தி செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு 200 வருட பாரம்பரியத்தை கொண்ட மலையக மக்களுக்கு சொந்த காணி உரிமை, வீட்டுரிமை, தொழிலுரிமை, இன்றைய தொழிலாளர் சட்டங்களும், இன்றைய காலகட்டத்திற்கேற்ப தேவையான அபிவிருத்தி மாற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மலையக இளைஞர்களின் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்யவும் பொருளாதார நிலையை கட்டியெழுப்பவும் தொழிற் பயிற்சி, தொழில் பட்டறைகள் மற்றும் தொழில் மூலதனம் வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# சடலத்தை இனங்காணுமாறு வேண்டுகோள்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை நகரில் தும்பகொட பிரதேசத்தில் வியாபார நிலையமொன்றுக்கு அருகில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பலாங்கொடைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை இனம் காண உதவுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு சுற்றுலா பயணியை தாக்கியவர் கைது

வெளிநாட்டு சுற்றுலாப் பயணியான பெண் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 27 வயதான நபர் என தெரியவந்துள்ளது. இவர் பண்டாரவளை பொலிஸாரால் நேற்று கைது செய்யதுள்ளனர். சுற்றுலாப் பயணி கடந்த புதன்கிழமை (21) மாலை உடரட மெனிக்கே புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டுப் பெண் புகையிரதத்தில் ஜன்னல் ஓரத்திலிருந்து செல்லும் போது, புகையிரதத்திற்கு வெளியில் நின்ற இளைஞன் தனது செருப்பை அவர் மீது வீசியுள்ளார்.

இதன்போது, செருப்பு வெளிநாட்டு பெண்ணின் முகத்தில் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பண்டாரவளையில் விபத்து 22 பேர் வரை படுகாயம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பண்டாரவளை, மல்வத்த தோட்டப்பகுதியில் வேலைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும்போது பெருந்தோட்டத்தொழிலாளர்கள் பயணித்த லொறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் சாரதி உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 19 பெண்களும், 3 ஆண்களும் அடங்குகின்றனர்.அவர்கள் பண்டாரவளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில்அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தடுப்புத் தொகுதி செயற்படாமல் போனமையால் லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.





**லுணுகல நிருபர்**

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயத்தின் பூரண அனுசரணையோடு பதுளை Friendly Ship அமைப்பினரினால் விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு பதுளை வை.எம்.எம். ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

பதுளை ப்ரண்லிஷிப் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் சோதிரட்ணம் நிரஞ்சன், இளம் கண்டுப்பிடிப்பாளர் சோ. வினோஜ்குமார், ப்ரண்லிஷிப் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நீதிமன்றக் கட்டளையை மீறி

# குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானப் பணிகள் முன்னெடுப்பு

குருந்தூர்மலையில் முல்லைத் தீவு நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கு பௌத்த கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலையில் விகாரைக்குரிய கட்டுமானப்பணிகள் தற்போது முடிவுற்றிருப்பதை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

குருந்தூர்மலைக்கட்டுமானப் பணிகளை இடைநிறுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் கூட அங்கு கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவிருக்கின்றது.

குறிப்பாக குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி கபோக் கல்லினால் ஆன புத்தர் சிலை ஒன்றினை நிறுவுவதற்கும், விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்த தேரர்களும், இராணுவத்தினரும், தென்னிலங்கையைச் சார்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தனர்.





இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து நாம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தோம்.

அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக நாம் கைது செய்யப்பட்டும் இருந்தோம்.

அதன்படி 19.07.2022அன்று இது தொடர்பில் ஆராய்ந்த நீதவான், குருந்தூர்மலைக்கும் நேரில் சென்று நிலமைகளை பார்வையிட்டதுடன், அன்றைய தினமே நீதிபதி கட்டளையொன்றையும் வழங்கியிருந்தார்.

அக்கட்டளையில்,12.06.2022 அன்று எவ்வாறு அந்தவிகாரையின் கட்டுமானப்பணிகள் காணப்பட்டதோ, அவ்வாறே இருக்கவேண்டும். அதற்குமேல் எவ்வித கட்டுமானப் பணிகளும் இனி மேற்கொள்ளக்கூடாதென உத்தரவிட்டிருந்தார்.

அதனைக் கண்காணிக்கும் பொறுப்பும் பொலிஸாரிடமும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது குருந்தூர்மலையில் கட்டுமானப்பணிகள் மிக வேகமாக இடம்பெற்று, பௌத்த விகாரை அங்கு முழுமையாக அமைக்கப்பட்டிருப்பதை நாம் காணக்கூடியதாகவிருந்தது.

ஆகவே நான் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்திற்குச்சென்று, முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்திருந்தேன்.

குறிப்பாக நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என்பதை முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

அத்தோடு அங்கு தொடர்ச்சியாக பொலிஸார் கடமையில் இருந்தும் கூட அங்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே பொலிஸார் இதற்கு பெறுப்புக் கூறவேண்டும் என்ற வகையிலே பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி அமரசிங்கிற்கு எதிராகவும் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபை கலைக்கப்பட்டாலும் திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

உள்ளூராட்சி சபை கலைக்கப்பட்டாலும் கிடப்பில் போடப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்ட வேலைத்திட்டங்களை முடிவுறுத்த வேண்டுமென சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் பிரதேசசபையில் இடம்பெற்ற பெப்ரவரி மாத அமர்வில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தியிருந்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

சாவகச்சேரிப் பிரதேசசபையின் 2021,2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட வேலைத்திட்டங்கள் பலவும் நாட்டு சூழ்நிலை காரணமாக கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது சபைகளின் ஆயுட்காலம் முடிவுக்கு வருகின்றன. எனவே,சபைகள் கலைக்கப்பட்டு புதிய சபைகள் அமைக்கப்பட்டாலும் சபைத்தீர்மானம் மற்றும் வரவுசெலவுத் திட்டத்திற்கு அமைவாக சகல வேலைத் திட்டங்களையும் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகள்

## கோம்பயன் இந்து மயானத்தில் எரிப்பது தொடர்பில் ஆராய்வு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கான எரியூட்டி அமைத்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கழிவுகள் அகற்றப்படாது லொறிகளில் ஏற்றி வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கு கோம்பயன் மணல் மயானப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் எரியூட்டி ஒன்றை அமைப்பது தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கோம்பயன் மணல் மயானம் இந்து மயான வளாகம் என்பதால் அங்கு மருத்துவ கழிவுகளை எரியூட்டுவது தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வட மாகாண ஆளுநரின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதம பொறியியலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கைக்குழந்தையுடன் கஞ்சா கடத்தல்; இளம் தாய் கைது

கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட இளம் தாயொருவர் நேற்று முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சிலாவத்தைப் பகுதியில் அமைந்துள்ள பஸ் ஒன்றில் வைத்து இளம்தாயார் தனது கைக்குழந்தையுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த இளம் தாயொருவர், கிளிநொச்சியில் கஞ்சாவைப் பெற்று, கொக்கிளாய்க்கு கொண்டுசெல்லவிருந்த போதே சிலாவத்தை பஸ் தரிப்பிடத்தில் வைத்து அவரது கைக்குழந்தையுடன் கைதுசெய்யப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இளம் தாயாரின் உடமையிலிருந்து 100 கிராம் அளவிலான கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியாவில் போதை மருந்து மாத்திரைகள் விற்பனை

### ஒருவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் போதையை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை விற்பனை செய்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 400 மருந்து வில்லைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

போதையை ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக போதை தடுப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ். ஜெயக்கொடியின் ஆலோசனையின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் மதுசங்கவின் வழிகாட்டலின் கீழ் விசேட பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

திருநாவற்குளம் பகுதியில் வைத்து சந்தேகநபர்களை மடக்கி பிடித்தனர்.

இதன்போது அவரின் உடமையிலிருந்து போதையை ஏற்படுத்தக்கூடிய 400 மருந்துமாத்திரைகள் கைப்பற்றியதுடன் 23 வயதுடைய இளைஞனொருவனையும் பொலிஸார் கைது செய்தனர்.

இத்தகைய மருந்துகள் அளவுக்கதிகமாக உட்கொள்ளும் சமயத்தில் போதையை ஏற்படுத்தும் என தெரியவருகின்றது. மருந்தகங்களில் 20 ரூபா தொடக்கம் 50 ரூபாவுக்கு இவை விற்பனை செய்யப்படுவதாகவும் இதை சந்தேகநபர் 500 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் விற்பனை செய்வது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஓர் தனியார் மருந்தகத்தில் 10 மாதங்களில் 42,700 போதை மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் இயங்கிவரும் காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் பொ.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி எம்.கெங்காதீஸ்வரன், கொழும்பு கெத்செமனே கொஸ்பல் சர்ச் இயக்குனர் வண அன்ரன் ராஜமணி உள்ளிட்டவர்களுடன் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் சிவில் பாதுகாப்பு திணைக்கள கட்டளை அதிகாரி லெப்.கேணல் துஷார திஷாநயக்க, புதுக்குடியிருப்பு இலங்கை வங்கி முகாமையாளர் அ.திலீபன், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மற்றும் பிரதேச செயலக உத்தியோக அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் போஷாக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கும் குடும்பங்கள், முதியவர்களைக் கொண்ட குடும்பங்கள் இனம் காணப்பட்டு 276 குடும்பங்களுக்கு தலா 15ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவு பொருட்களும் தலா பத்து முட்டைகளும் 400 குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் ஒரு கட்சிக்கான அலுவலகம் அல்ல

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் ஒரு கட்சிக்கான அலுவலகம் அல்ல.அதனால் நீல வர்ணம் அகற்றப்படுமென யாழ்.மாவட்டஅரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்திற்கு நீல நிற வர்ணம் பூசப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் ஒருங்கிணைப்பு குழு அலுவலமே தவிர அது கட்சி அலுவலகம் அல்ல. ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தில் ஏதாவது கட்சி சார்பான வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் அது உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் எனவும் உறுதியளித்தார்.


மேலும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளமையால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அலுவலகத்தில் துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.


## அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

யாழ்ப்பாணம் பொன் பரமாநந்தர் பாடசாலை அதிபர் பொன்னம்பலம் ரவிச்சந்திரன் 35 வருட கல்வி சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். யாழ்ப்பாணம் குரும்பகிட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியை பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். இவர் 1987 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டார்.1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் கணித பாட ஆசிரியராக தனது பயிற்சி நெறியை பூர்த்தி செய்தார். 2000 ஆம் ஆண்டு கல்வி இளமாணி கற்கை நெறியை தேசிய கல்வி நிர்வாகத்திலும் பூர்த்தி செய்தார். 1987 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை நுவரெலியா அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக இவர் கடமையாற்றியபோது இப்பிரதேசத்திலுள்ள அதிகமான மாணவர்களை கணித பாடத்தில் சித்திபெற செய்தார். இவருடைய காலத்திலேயே மிக அதிகமான மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடைந்தனர். இப்பிரதேசத்தில் இவரிடம் கல்வி கற்ற நூற்றுக்கணக்கானோர் இன்று அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் மற்றும் பலர் பல்வேறு துறைகளில் காணப்படுகின்றனர். இவர் 1999 ஆம் ஆண்டு அக்கரப்பத்தனை பாடசாலையிலிருந்து வவுனியா வலயக் கல்வி காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு கடமையாற்றிய இவர் 2000 ஆம் ஆண்டு அங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்று வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கடமையாற்றினார். இவர் 2012 ஆம் ஆண்டு அதிபராக பதவி உயர்வு பெற்றார். வவுனியா அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலயம், வவுனியா நெருங்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய இவர் யாழ்ப்பாணம் பொன். பரமானந்தர் மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு தொடர்ச்சியாக அதிபராக சேவையாற்றிய இவர் தனது 60 ஆவது வயதில் அண்மையில் ஓய்வு பெற்றார். இவர் யாழ்ப்பாணம் குரும்பகிட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த பொன்னம்பலம் சரோஜாதேவி தம்பதியினரின் மூத்த புதல்வராவார்.



## ஓவியக் கண்காட்சி





**யாழ்.விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

'இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்' என்னும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகியது.

ஓவியக்கண்காட்சி நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்' என்னும் தலைப்பில் ஓவியப்போட்டி ஒன்றைக் கடந்த வருடம் நடாத்தியிருந்தது.

இதற்காக இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களிடமிருந்து பொருளாதார நெருக்கடியின் போதான வன்முறைகள், உணவுப்பற்றாக்குறை, வறுமை, போக்குவரத்துச் சிரமங்கள், அதிகரித்த வேலையின்மை, கல்வி, ஆரோக்கியம், ஊட்டச்சத்து, பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவம், விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டம், வெளிநாட்டு நாணயப்பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்ற உப தலைப்புக்களில் வரையப்பட்ட சுமார் 1925 ஓவியங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. அந்த ஓவியங்கள் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஓவியப்போட்டியில் வெற்றிபெற்ற ஓவியங்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

# கிழக்கின் குரல்



## கல்முனை நூலகத்திற்கு மன்சூரின் பெயரை சூட்டுவதற்கான பிரேரணை நிறைவேற்றம்

பெரியநீலாவணை விசேட நிருபர்



கல்முனை பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை சூட்டுவதற்காக கல்முனை மாநகர சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை 11 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்காகக் கூட்டப்பட்ட விசேட பொதுச் சபை அமர்வு வியாழக்கிழமை பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது. இப்பிரேரணை தொடர்பில் முஸ்லிம் உறுப்பினர்கள் ஆதரவாகவும் தமிழ் உறுப்பினர்கள் எதிராகவும் வாதப்பிரதிவாதங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் இப்பிரேரணை மாநகர முதல்வரினால் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பிரேரணைக்கு ஆதரவாக 23 உறுப்பினர்களும் எதிராக 12 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர். 05 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, சாய்ந்தமருது தோடம்பழ சுயேட்சைக்குழு மற்றும் ஹெலிகொப்டர் சுயேச்சைக் குழு உறுப்பினர்களுமாக 23 முஸ்லிம் உறுப்பினர்களே ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மான் சுயேட்சைக் குழு உறுப்பினர்களுமாக 12 தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்திருந்தனர்.



திருகோணமலை பல்கலைக்கழக (Faculty of Communication & Business Studies) மாணவர்களால் பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை (24) திருகோணமலை அபயபுர சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற போது,.. (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

## மீன் வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்க 75 இலட்சம் ரூபா



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் வளர்ப்புத்திட்டத்தை ஊக்குவிக்க சுமார் 75 இலட்சம் ரூபாய் நிதி மீன்வளர்ப்பாளர்களுக்கு நேற்றுக் காலை பகிர்ந்தளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்ற காசோலை வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் பிரதம அதியாகக் கலந்து கொண்டு காசோலைகளை கையளித்தார்.

மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 29 மீன் வளர்ப்பாளர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டன. அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறையில்

## காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பலி, மூவர் படுகாயம்

சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய கொக்கநாரை வட்டையில் வயலில் நெற்களை காவல் காத்து வந்த விவசாயிகள் நான்கு பேரை நேற்று (24) அதிகாலை காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை மட்டக்களப்பு தரவை 01 பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான முகம்மது அலியார் தாஹீர் என்பவரே இவ்வாறு உயிரிழந்ததுடன், சம்மாந்துறை மலையடிக்கிராமத்தைச் சேர்ந்த 52 வயது மற்றும் உடங்கா 02 சேர்ந்த 50 மற்றும் 29 வயதுடைய விவசாயிகள் படுகாயமடைந்து சம்மாந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இவ்விவசாயிகள் நான்கு பேரும் தங்களது வயல்களில் அறுவடை செய்யப்பட்ட நெற்களை காவல் காத்துக்கொண்டிருந்த வேளையில் அதிகாலையில் வந்த காட்டு யானை தாக்கியதில் இச்சம்பவம் இடம்பெற்றதுள்ளது. மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) ஏற்பாட்டில் அட்டாளைச்சேனையின் பெண் கவி தாயினி மேகா மிர்சா எழுதிய 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு MPCS கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம். அறூஸ் தலைமையில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் நூல் ஆய்வினை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், நூல் அறிமுகத்தை பன்னூலாசிரியர் எஸ்.எல். மன்சூர், நூல் நயத்தினை பிரபல எழுத்தாளர் கல்முனை ஜூல்பிகா ஷெரிபும் நிகழ்த்தவுள்ளனர்.






விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நெல் கொள்வனவு செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசத்தில் விவசாயிகளிடமிருந்து கட்டுப்பாட்டு விலையில் நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் (23) ஆரம்பித்து வைக்கப்பட்ட போது,.. (படம்: பெரியநீலாவணை விசேட நிருபர்)

## கரடியனாறு காட்டுப் பகுதியில் மோட்டார் குண்டு செயலிழப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த மோட்டார் குண்டொன்றை விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 81 ரக மோட்டார் குண்டை மீட்டு நீதிமன்ற அனுமதியுடன் அதே இடத்தில் செயலிழக்கச் செய்ததாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாராயம் விற்றவருக்கு முப்பதாயிரம் ரூபா அபராதம்

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்க்கேணி ஒலுவில் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு முப்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திராய்க்கேணி பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி 180 மில்லி லீற்றர் நிறையுடைய சாராயத்தை 700 ரூபாவிற்கு விற்பனை செய்தமை மற்றும் 180 மில்லி லீற்றர் அடங்கி 19 சாராய போத்தல்களை தன்வசம் வைத்திருந்த குற்றங்களுக்காக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி மஜீத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபர் ஒருவரை கைது செய்திருந்தனர்.

கடவுச்சீட்டுக்களை

## தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது

(ஒலுவில் விசேட நிருபர்)

பல கடவுச்சீட்டுக்களை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை பஸ் தரிப்பு நிலையத்தில் வியாழக்கிழமை (23) சந்தேகத்திற்கிடமாக நபர் ஒருவர் பல கடவுச்சீட்டுக்களை நபர்களிடம் பெற்று வருவதாக, கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதியை சேர்ந்த 51 வயது மதிக்கத்தக்க ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என கூறி சிலரிடம் பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டுக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் வங்கி கணக்கின் ஊடாக பலரிடம் பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேக நபர் வசம் இருந்த கடவுச்சீட்டுக்கள் மீட்கப்பட்டு உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

இவ்வாறு வரவழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நற்பிட்டிமுனை பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் தமது கடவுச்சீட்டுக்களை சந்தேக நபரிடம் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பிற்காக வழங்கியதாகவும் அதற்காக சந்தேக நபரின் வங்கி கணக்கிற்கு பெருந்தொகையான பணத்தை வைப்பிலிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வாக்குமூலங்களை பெற்றுள்ளதுடன் கைதான சந்தேக நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரா அல்லது இடை தரகரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர்கள் இருவர் தலைமறைவு

## நிதி மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்

### கல்முனை மாநகர முதல்வர் றகீப்

சாய்ந்தமருது விசேட நிருபர்

நிதி மோசடியில் ஈடுபட்ட கல்முனை மாநகர சபை ஊழியர்கள் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், பொலிஸ் உயரதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதிக் கையாடல் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் எவராயினும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றி வந்த இரு ஊழியர்கள் நிதிக் கையாடலில் ஈடுபட்டுள்ள விடயம் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, நான் ஆணையாளருக்கு வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் அவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, நிதி கையாடல் சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



முகத்தோற்றளவில் அவ்விரு ஊழியர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியிருப்பதால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவர்கள் இருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேவேளை, குறித்த இருவரும் தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், எவ்வாறாயினும் இவர்களைக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை நான் வலியுறுத்திக் கேட்டுள்ளேன்.

இவ்விடயத்தில் எவர் மீதும் கருணை காட்டப்படமாட்டாது. நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நிதி மோசடியுடன் எவர் சம்மந்தப்பட்டிருந்தாலும் உரிய தண்டனைகளை பெற்றுக்கொடுக்கப்படும் என்று கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணி தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்து மா விநியோகம்

காரைதீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு பின்தங்கிய அபிவிருத்தி சங்கம் (BUDSUK) மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் (FOBHUK) ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் சத்துமா விநியோகம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கிராமங்களில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துமா வழங்கப்படுகிறது.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ந. ரமேஸ் தலைமையில் இடம்பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1000 கிராம் சத்துமா பேக் வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டு நிறுவனங்களும் இந்தத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாகத் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது.

கல்முனை பிரதேசத்தில் இரண்டு கட்டங்களாக 3000 பொதிகள் விநியோகித்து இரண்டாம் கட்ட விநியோகத்தை நிறைவு செய்துள்ளனர்.

# அமெரிக்க – இந்திய உறவு மேம்பட உழைப்பேன்

## பிரதிநிதிகள் சபை சபாநாயகர் உறுதி

### கலிபோர்னிய புலம்பெயர் இந்தியர் மத்தியில் உரை

புலம்பெயர்ந்த கலிபோர்னிய இந்தியர்கள் ஒழுங்கு செய்திருந்த ஒரு நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்க பிரதிநிதிகள் சபை சபாநாயகர் கெவின் ஒக்கார்தி, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சந்துவை வரவேற்று பாராட்டியதோடு இந்திய – அமெரிக்க நல்லுறவு மேலும் மேம்படுவதற்காக பாடுபடுவேன் என்று தெரிவித்தார்.

கலிபோர்னியாவின் 'இந்தியன் வெல்ஸ்' என்ற இடத்தில் கலிபோர்னிய இந்திய வர்த்தக தொழில்துறை சமூகம் இந்திய – அமெரிக்க நல்லறவு சமூகம் இந்திய – அமெரிக்க நல்லுறவு தொடர்பாக ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்வில் உரையாற்றிய சபாநாயகர் மெக்கார்தி, அமெரிக்க இந்திய பிணைப்பு எதிர்காலத்தில் மேலும் வலுவடைய தான் உழைப்பேன் என்றார்.

இங்கு உரையாற்றிய இந்தியத் தூதுவர் சந்து,

கடந்த 75 ஆண்டுகளாக எல்லாத் துறைகளிலும் இந்தியா பெற்றிருக்கும் வளர்ச்சியை குறிப்பிட்டதோடு, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் டிஜிட்டல் மயப்படுத்தல், பசுமை சக்திவளம் என்பனவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கோடிட்டுக் காட்டினார். மோடி – பைடன் நெருக்கத்தால் ஏற்படப்போகும் விளைவுகளையும் புலம்பெயர் இந்தியர்களின் ஆதரவையும் அவர் குறிப்பிட்டார்.

கலிபோர்னியாவில் பல செல்வாக்கு பெற்ற புலம் பெயர் இந்தியர்கள் வசித்து வருகின்றனர். உத்தர பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நட்டாச்சார்சிங் சண்டி என்பவர் பலகோடி டொலர் வருமானம் தரும் வர்த்தக வலையமைப்பை இங்கே நடத்தி வருகிறார்.

# சத்ராயன் – 3 பரிசோதனைகள் வெற்றிகரமாக நிறைவேறின

## இஸ்ரோ அறிவிப்பு

சந்திரனுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள சத்ராயன் 3 க்கான பரிசோதனைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் சந்திரனில் இறங்குவது, சந்திர வாகனத்தை தரையில் இறக்குவது தொடர்பான மிக முக்கியமான சோதனைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றிருப்பதாகவும் இஸ்ரோ தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி 31 முதல் பெப்ரவரி இரண்டு வரையில் இந்த பரிசோதனைகள் பெங்களூரு ராவ் செய்கைக் கோள் நிலையத்தில் நடத்தப்பட்டன. வளியும் எடையுமற்ற சூனியத்தில், இயங்கும் கோள், தரையிரங்கும் வாகனம் மற்றும் ரோவர் வாகனங்கள் எவ்வாறு தமக்கிடையே தகவல்களை பரிமாறிக் கொண்டு இயங்கும் என்பது இப்பரிசோதனைகளில் முக்கியமாக அவதானிக்கப்பட்டது. தரையில் இறங்கிய பின்னர் அடுத்த நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பதும் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. பரிசோதனைகள் திருப்திகரமான அமைந்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# நுவரெலியா மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு செயற்றிட்டம்

மாவத்தகம தினகரன் நிருபர்





இலங்கையானது 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பிற்பாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. பல்வேறு ஆய்வுகளின் படி இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரை பங்கினர் உணவு பாதுகாப்பற்றவர்களாக காணப்படுகின்றனர். அதுமற்றுமன்றி, அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் தமது உணவு தேவையை குறைத்து வருகின்றனர்.

அல்லது தவிர்த்து வருகின்றனர். அதிக பணவீக்கம், வாழ்வாதாரத்தை இழத்தல், அத்தியாவசிய உணவு பொருட்கள், மருந்து, எரிபொருள், மின்சாரம், எரிவாயு என்பவற்றிற்கான விலை அதிகரிப்பு பாரியளவில் இலங்கை மக்களை பாதித்து வருகின்றது என்று மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைவர் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் மனித அபிவிருத்தி தாபனம் UNOPS நிறுவனத்தின் உதவியுடன் செற்படுத்தும் உணவு பாதுகாப்பு சம்பந்தமான திட்ட கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

மேற்படி உணவு பாதுகாப்பு சம்பந்தமான செயற்திட்டம் மனித அபிவிருத்தி தாபனம் ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகளுக்கான அலுவலகத்தின் UNOPS நிதி உதவியுடன் பெருந்தோட்ட மக்களின் பாதுகாப்பான உணவு செயற்திட்டத்தை நுவரெலியா மாவட்ட கொட்டகலை பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றது.

மேலும் அவர் குறிப்பிடும்போது,

இத்திட்டமானது நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்பள்ளி மாணவர்கள், பெருந்தோட்ட சிறுவர் அபிவிருத்தி நிலைய சிறார்கள், கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வலது குறைந்தவர்கள், முதியவர்கள் போன்றவர்கள் மத்தியில் நடைமுறைபடுத்தபட்டு வருகின்றது.

இத்திட்டமானது நுவரெலியா மாவட்டத்தில் கிளனமேரா, டெரிகிளயார், சார்மஸ், அகில், டிரைட்டன், ஸ்டெலிங், கூம்வுட், எரிங்டன், லொகில், கிரேக்லி, மேபீல்ட் போன்ற தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படும் தோட்டங்களில் தாய்மார் குழு, இளைஞர் குழு,வயோதிபர் குழு இத்திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.






பேருவளை சீனன் கோட்டை பத்தை சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக சந்தை தொகுதியில் ஈ.ஜீ.எல் இரத்தினக்கல் ஆய்வுகூடம் Emteem Gem Laboratory (EGL LAB) புதிய கட்டடத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவுக்கு சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகச் சங்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல், முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான கலாநிதி எம். இஸட். எம் நிஸார், முன்னாள் செயலாளர் இஸ்மத் ஸாலி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

# சுகோய் பயணிகள் விமானங்களை இந்தியாவில் தயாரிக்க ரஷ்யா விருப்பம்

ரஷ்ய தயாரிப்பான சுகோய் பயணிகள் ஜெட் விமானங்களை இந்தியாவில் தயாரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ரஷ்யாவின் யுனைட்டட் ஏயார்கிராப்ட் கோர்பரேஷன் இந்தியாவின் ஹிந்துஸ்தான் ஏரோனோட்டிக் நிறுவனத்தோடு ஆரம்பித்துள்ளது.

சுகோய் சுப்பர் ஜெட் 100 என்பது நூறு பயணிகள் பயணிப்பதற்கான விமானம். ரஷ்ய பாகங்களுடன் இது ரஷ்யாவிலேயே கட்டப்படவுள்ள அதேசமயம் இந்தியாவில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலையில் தரமான வெளிநாட்டு பாகங்கள் பொருத்தப்பட்டதாக சர்வதேச தரம் கொண்டதாக சுகோய் விமானங்கள் கட்டப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

இந்தியாவில் நடைபெற்ற விமான கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்ட ரஷ்ய ஏயார்கிராப்ட் கோர்பரேஷனின் பணிப்பாளர் நாயகமான சிலையூஸார் இத் தகவலை வெளியிட்டார்.

இந்திய நிறுவனத்தின் சாதகமான பதிலுக்காகக் காத்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

உக்ரைன் யுத்தத்தையடுத்து மேற்குலக நாடுகள் விதித்திருக்கும் பொருளாதாரத் தடையால் ரஷ்யாவின் முக்கிய தொழில்துறைகள் பாதிப்பு அடைந்துள்ளன. சர்வதேச தர சுகோய் பயணிகள் விமான தயாரிப்பு இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதையடுத்தே ரஷ்யா அவ் விமானங்களை இந்தியாவில் தயாரிக்க முன்வந்திருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

# அவுஸ்திரேலியா வாழ் தமிழரின் பார்வையில் 'மலையகம் 200'

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவில் இருந்து குறிப்பிடத்தக்க அளவில் மக்கள் இடம் பெயர்ந்தனர். உலகின் பிற பகுதிகளில், குறிப்பாக இலங்கை, தென்னாபிரிக்கா, பிஜி, கயானா, ட்றினிடாட் மற்றும் மொரீஷியஸ் போன்ற பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் நிலவிய பொருளாதார வாய்ப்பு இவ்விடப்பெயர்வின் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். இந்தக் குடியேற்ற நாடுகளுக்கு தொழிலாளர் தேவை இருந்ததால், மேலும் பல இந்தியர்கள் இந்த இடங்களில் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள தங்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தயாராக இருந்த போது வேறும் பல அக, புறக்காரணிகள் அவர்களின் வெளியேற்றதிற்கு ஊக்கியாக மாறின.

இந்திய அரசியல் சூழ்நிலையும் இடம்பெயர்வதற்கான மற்றொரு முக்கியமான காரணமாகும். அக்காலகட்டத்தில் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இந்திய மக்கள் மீது கடுமையான சட்டங்களையும் ஒடுக்கு முறைகளையும் அப்போது விதித்துக்கொண்டிருந்தது. பரவலான வறுமை மற்றும் ஒடுக்குமுறைக்கு வழிவகுத்தது.

உதாரணமாக இந்தியாவில் இருந்து பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பட்டு, வாசனைத்திரவியங்கள் போன்ற பொருட்களுக்கு ஆரம்பத்தில் அதிக வரி விதிக்கப்பட்டு பின்பு முற்றாகத் தடை செய்யப்பட்டது. வேறும் பல உள்நாட்டு உற்பத்திகளுக்கு உயர் வரி விதிக்கப்பட்டது.

பிரித்தானியாவில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 23 % வரியும், இந்தியாவில் இருந்து பிரித்தானியாவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு 2030% வரியும் விதிக்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகள் சுதேச உற்பத்திகள் முற்றாக முடங்கிப் போகவும் வறுமை தலைவிரித்தாடவும் வழிவகுத்தது. ஆங்கிலேய அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கொடுமையான நிலவரி முறை இன்னொரு உதாரணமாகும். சென்னை மாகாணத்தில் விளைபொருட்களின் அரைப்பங்கு வரியாக அறவிடப்பட்டது.

இப்படியான திட்டமிட்ட ஒடுக்குமுறையால் 1799 1834 ஆண்டு காலகட்டத்தில் 40 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தியாவின் தென் மாகாணங்களில் பஞ்சத்தால் இறந்து போயினர். பல இந்தியர்கள் இந்த நிலைமைகளில் இருந்து தப்பிக்க உலகின் பிற பகுதிகளுக்கு குடிபெயர்ந்து அதிக சுதந்திரத்துடனும் கண்ணியத்துடனும் வாழ முயன்றனர். இவற்றுக்கப்பால், இந்தியாவில் உள்ள சாதி அமைப்பும் மக்கள் இடம்பெயர்வதில் பெரும் பங்கைக் கொண்டிருந்தது.

தாழ்த்தப்பட்ட சாதியினர் பெரும்பாலும் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டதுடன் அவர்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பாகுபாடுகளை எதிர்கொண்டதனால் அவர்கள் வேறு இடங்களில் சிறந்த வாய்ப்புகளைத் தேட முற்பட்டனர்.

ஒட்டு மொத்தமாக, 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து மக்கள் இடம்பெயர்வது என்பது பொருளாதார, அரசியல் மற்றும் சமூகக் காரணிகளின் கலவையால் உந்தப்பட்ட ஒரு சிக்கலான நிகழ்வாகும். இந்த இடம்பெயர்வு இந்தியாவை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் அவர்கள் விட்டுச் சென்ற சமூகங்கள் மீது நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியது.

### மலையகத் தொழிலாளர்களின் இலங்கை வருகை

ஆங்கிலேய ஆளுநராக பிரெட்றிக் நோர்த் கடமையாற்றிய 1798 – 1815 காலப்பகுதியிலேயே இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படத் தொடங்கி விட்டனர். இவர்கள் பெரும்பாலும் வீதிகள், பாலங்கள் அமைப்பதற்காக ஒப்பந்தகாரர்களால் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இந்தியாவில் இருந்து படகுகள் மூலம் தலைமன்னாருக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து மூன்று மாதகால நடைப்பயணங்களின் பின்னர் தேவையான இடங்களுக்குச் சென்றனர்.

இலங்கையில் கோப்பிப் பயிச்செய்கை ஆங்கிலேயர்களால் ஆரம்பிக்கப்பட்டபோது பெருந்தோட்டத் தொழிலுக்காக தொழிலாளர்கள் இந்தியாவில் இருந்து 1823 இல் முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், கொடிய விசப்பாம்புகள், மனிதரைக் கொல்லும் சிறுத்தைகள், உயிர்க்கொல்லி மலைக்குளவிகள் நிறைந்த மலையகக் காடுகளுக்குள் குடியேற்றப்பட்டு இவ்வருடத்துடன் இரண்டு நூற்றாண்டுகள் நிறைவு பெறுகின்றன.

1830 ஆம் ஆண்டளவில் பிரித்தானியா நிறைவேற்றிய அடிமைகள் தடைச்சட்டத்தின் பின்பாக பெருமளவான தொழிலாளிகள் இந்தியாவில் இருந்து கோப்பித் தோட்டங்களுக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர். 1839 1859 ஆண்டுக்கு இடைப்பட்ட 20 வருட காலத்தில் மாத்திரம் 9 இலட்சம் இந்தியத் தொழிலாளர்கள் கோப்பிப் பயிர்ச் செய்கைக்காக கொண்டு வரப்பட்டனர் என்றும் பின்பு அதில் அரைப் பங்கினர் இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர் என்றும் குறிப்புக்கள் கூறுகின்றன.

1865 ஆம் ஆண்டளவில் 75% ஆன தொழிலாளர்கள் ஆண்களாகவும் 18% ஆன தொழிலாளர்கள் பெண்களாகவும் 7% சிறுவர்களாகவும் இருந்துள்ளனர். பிற்காலப் பகுதியிலேயே பெருமளவில் பெண்களும் தொழிலாளர்களாகவும், திருமண பந்தங்கள் மூலமாகவும் இலங்கையின் மலையகப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டனர் என்று தெரியவருகின்றது.

இந்தியாவில் இருந்து இலங்கையில் வந்து குடியேறியோரை பெருந்தோட்டம் சார்ந்த இந்தியத் தமிழர், பெருந்தோட்டம் சாராத இந்தியத்தமிழர் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வியாபார நோக்கமாக வந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார் மற்றும் அவர்களுக்கு உதவியாக வந்தவர்கள் இந்தப் பெருந்தோட்டம் சாராத இந்தியத் தமிழர்களுக்கு உதாரணமாகும். பெருந்தோட்டம் சார்ந்த இந்தியத்தமிழர்களில் பெரும்பான்மையோர் திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் இருந்தும், பெருந்தோட்டம் சாராத இந்தியத்தமிழர்கள் பெரும்பாலும் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வந்ததாக குறிப்புக்கள் மேலும் சொல்கின்றன. எந்தப் பிரதேசங்களில் இருந்து எத்தனை வீதமானோர் இலங்கைக்கு வந்தனர் என்ற முழுமையான விபரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னான காலப்பகுதியில், முக்கியமாக பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதன் பின்பாக தொழிலாளர்கள் வாழ்வில் பூகம்பம் வீசதொடங்கியது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னான மலையகத் தமிழர்களின் வாழ்க்கை இலங்கை சுதந்திரமடைந்த சில மாதங்களிலேயே 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் காரணமாக இலங்கயின் சனத்தொகையின் 15% ஆகவிருந்த இந்திய வம்சாவளி தமிழர்களில் 7 இலட்சம் பேர் நாடற்றவர் ஆக்கப்பட்டனர். இதன் காரணமாக அவர்களின் சனத்தொகை 4% ஆக குறைக்கப்பட்டது.

1964 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சிறிமா சாஸ்திரி உடன்படிக்கையின் பிரகாரம் நாடற்றவராக இருந்தவர்களில் 525,000 பேரை இந்தியா தொகுதி தொகுதியாக அடுத்த 15 ஆண்டுகளின் எடுத்துக்கொண்டது. இவர்கள் தலைமன்னார் ஊடாக கப்பலில் ராமேஸ்வரம் கொண்டு செல்லப்பட்டு மண்டபம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பின்பு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் குடியேற்றப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் மதுரையை அண்டிய பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனர் என்றும், ஆனால் அவர்களும் அங்குள்ளவர்களால் விரும்பப்படாமல் மிகவும் கடின வாழ்க்கையையே வாழ்கின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பலர் மூணாறு போன்ற இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் சென்று தமக்குத் தெரிந்த வேலையைச் செய்கின்றனர்.

ஈழப்போருக்குப் பின்னான மலையகத் தமிழர்களின் வாழ்வியல் இறுதி ஈழப்போருக்குப் பிந்திய காலகட்டத்தில் இலங்கையில் தேசியவாத உணர்வுகள் அதிகரித்துள்ளதுடன், மலையகத் தமிழர்கள் உட்பட சிறுபான்மையினரின் பாகுபாடும் அவர்கள் ஒடுக்கப்படுவதும் அதிகரித்து வருகின்றது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் நாட்டின் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் தொடர்ந்து முக்கியமான பங்காற்றி வருகின்றனர். அவர்கள் நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன் கல்வி, அரசியல் மற்றும் கலை போன்ற துறைகளிலும் பெரும் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

சமீப ஆண்டுகளில், இலங்கையில் மலையகத் தமிழர்களின் நிலைமை மிகவும் சிக்கலானதாகவும் கடினமாகவும் மாறியுள்ளது. 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட மலையகத்தமிழர்கள் 2009 இல் முடிவடைந்த உள்நாட்டுப் போராலும் மிகவும் பாதிகப்பட்டனர்.

பல இந்தியத் தமிழர்கள் விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்து போராடி வீரமரணமடைந்தனர். பல குடும்பங்கள் வட மாகாணத்தில், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் குடியேறின.

2012ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் படி மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவழி மலையக மக்களே. அவர்களும் தம்மை இலங்கைத் தமிழர் என்று குடிசன மதிப்பீட்டுப் பத்திரத்தில் பதிவதால் உத்தியோக பூர்வமாக அவர்களின் தொகை இனிமேற் காலங்களில் பிரித்தறியப்பட முடியாமல் போகலாம்.

தங்களின் பூர்வீகத்தை தெளிவாகப் புரிந்துக்கொள்ளாமல் அல்லது குடிசன மதிப்பீட்டு அலுவலகர்களின் போதிய பயிற்சியின்மையால் இலங்கைத் தமிழர்களாக இவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்கின்றார்கள். குடிசன மதிப்பீட்டு சட்டவிதிமுறைகளின்படி தொடர்ந்து அடுத்து வரும் 5 குடிசன மதிப்பீட்டு கணக்கெடுப்பில் 5% க்கும் குறைவாக இருக்கும் இனம் குடிசனப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும் ஆபத்து இருப்பதாக சொல்லப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின்படி மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரம் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் குடித்தொகை வடமாகாணத்தின் சனத்தொகையிலும் பார்க்க அதிகமானது என்ற புள்ளிவிபரம் பலரையும் ஆச்சரியமூட்டலாம்.

200 வருடம் கழிந்தும் இன்றும் பல மலையக மக்கள் லயன்கள் என்றழைக்கப்படும் லைன் ஹவுஸ் (Line House) களில் வாழ்ந்து வருவது எவ்வகையில் நியாயமாகும்?

இவர்களின் வரலாற்றைப் பற்றி பெரியளவில் தெரிந்திராத தமிழ் மக்கள் இன்னமும் எம்மத்தியில் இருக்கின்றனர் என்பது உங்கள் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

14 கிலோமீற்றர் நடந்து பாடசாலைக்கு சென்று கல்வி கற்று மீண்டும் 14 கிலோமீற்றர் நடந்து திரும்பிவரும் மாணவர்கள் இன்றும் மலையகக் கிராமங்களில் உள்ளனர் என்றால் நம்புவீர்களா?

நேரடியாக இந்தப்பிரதேசங்களுக்கு சென்று இந்த மக்களின் துயரங்களைப் பார்க்க, உதவ முடியாதவர்கள் பாலாவின் பரதேசி திரைப்படம் பார்த்தீர்கள் என்றால் இம்மக்களின் வாழ்வியலையும் துயரங்களையும் ஓரளவுக்கு புரிந்துகொள்ளலாம்.

நன்றி: எதிரொலி

## இலங்கை கிரிக்கெட் சபைக்கு

# புதிய யாப்பை வரைய 10 பேர் கொண்ட குழு நியமனம்



இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்மொழியப்பட்ட புதிய யாப்பு வரைவு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டீ சித்ரசிரி தலைமையில் 10 பேர் கொண்ட குழுவை விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார்.

“சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் தொழில்நுட்பக் குழுவின் உதவி, வழிகாட்டல் மற்றும் ஆலோசனையுடன் இந்த சுயாதீன நிபுணர் குழு பாரபட்சமற்ற மற்றும் நோக்கமுடைய தேவையான பங்களிப்பாளர்களின் விசாரணைகள் மற்றும் ஆலோசனைகளை நடத்தும்” என்று அமைச்சர் ரணசிங்க கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான சரித் சேனநாயக்க மற்றும் பர்வீஸ் மஹ்ரூப் ஆகியோரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் அடிப்படையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த குழு இலங்கை கிரிக்கெட் சபைக்காக புதிய யாப்பு ஒன்றை வரைய அல்லது திருத்தம் மேற்கொள்ள முயற்சிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த குழு இரண்டு மாதங்களுக்குள் முன்மொழியப்பட்ட புதிய யாப்பு வரைவை மேற்கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழு பற்றிய ஊடக அறிக்கை வெளியாவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட ஊடக அறிக்கையில், 2022 ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் சபை 6.3 பில்லியன் ரூபா சாதனை நிகர இலாபத்தை ஈட்டி இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. இது 2021 உடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அதிகரிப்பாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# ஏழாவது முறையாக இறுதிக்கு முன்னேறியது அவுஸ்திரேலியா




மகளிர் டி20 உலகக் கிண்ண அரையிறுதியில் இந்தியாவை 5 ஓட்டங்களால் வீழ்த்திய நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக ஏழாவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

கேப்டவுனில் கடந்த வியாழக்கிழமை (23) நடைபெற்ற அரையிறுதியில் இந்திய அணி கடைசிவரை போராடியபோதும் வெற்றிபெற கடைசி ஓவருக்கு 16 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டபோது அதனால் 10 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீராங்கனை போத் மூனி 37 பந்துகளில் 54 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில் சவாலான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இந்திய அணி 28 ஓட்டங்களுக்கு முதல் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும் அணித்தலைவி கர்பன்பிரீம் கவுர் (52) மற்றும் ஜமிமா ரொட்ரிகஸ் (43) அபாரமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை கொடுத்தனர்.

எனினும் இந்த இரு வீராங்கனைகளும் ஆட்டமிழந்த பின்னர் இந்திய மகளிர் அணியினர் கடைசி ஓவர்களில் தடுமாற்றம் கண்டனர். பின்வரிசையில் தீப்தி ஷர்மா 17 பந்துகளில் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களை பெற்றபோதும் அவரால் இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்ய முடியவில்லை.

எனினும் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை பெற்றது.

மகளிர் டி20 உலகக் கிண்ண இறுதிப் போட்டி நாளை (26) கேப்டவுன் நகரில் நடைபெறவுள்ளது.

## பொன் அணிகள் போர் ஆரம்பம்:

# புனித பத்திரிசியார் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 272 ஓட்டங்கள்

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான பொன் அணிகள் போர் என்று அழைக்கப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டி 106 ஆவது தடவையாக நேற்று (24) ஆரம்பமானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டு நாட்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸுக்கு வலுவான ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்படி அந்த அணி 74.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்தியது. இதன்போது ஐ. ஜெஸ்ரிகன் (44) மற்றும் எம். சௌத்ஜன் (31) முதல் விக்கெட்டுக்கு 51 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

மத்திய வரிசையில் வந்த டி. அபிலாஷ் சிறப்பாக ஆடி அரைச்சதம் ஒன்றை பெற்றார். 98 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 8 பௌண்டரிகளுடன் 55 ஓட்டங்களை பெற்றார். அதேபோன்று கடைசி வரிசையில் எஸ். சமின்தனும் வேகமாக துடுப்பெடுத்தாடி 40 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 50 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் எஸ். நர்தனன், பி. ப்ருதன் மற்றும் ரொயிஸ் ஜென்சோன் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இன்று (25) போட்டியின் இரண்டாவது மற்றும் கடைசி நாளாகும்.

புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் யாழ்ப்பாண கல்லூரி அணிகளுக்கிடையில் 1917ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் இந்த கிரிக்கெட் போட்டி, போர்க்காலங்களைத் தவிர மற்றைய காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற 105ஆவது போட்டியில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில், புனித பத்திரிசியார் கல்லூரி 34 தடவைகளும், யாழ்ப்பாண கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 32 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

# அக்கரைப்பற்றில் 'செக்வோல்' விளையாட்டு அகடமி ஆரம்பம்

அக்கரைப்பற்று வடக்கு
தினகரன் நிருபர்



நாடாளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்து வரும் செக்வோல் விளையாட்டை அக்கரைப்பற்றிலும் மேம்படுத்தும் வகையில் ‘அக்கரைப்பற்று செக்வோல் அகடமி’ கடந்த வியாழக்கிழமை (23) அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா உள்ளக மைதானத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த வருடம் ஆசிய பசுபிக் செக்வோல் சம்பியன் போட்டியில் இலங்கை நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி மலேசியா சென்று விளையாடிய இலங்கை செக்வோல் தேசிய அணியின் வீரரும், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி விளையாட்டு பயிற்றுவிப்பாளருமான எம். எச். சபீர் அலி இதனை ஆரம்பித்து வைத்தார்.

இப்பிராந்தியத்திலே முதலாவதாக ஆரம்பித்து வைக்கப்படும் இந்த விளையாட்டு அகடமியில் ஆர்வமுள்ள வீரர்கள் இணைந்து கொள்ள முடியும் என்று சபீர் அலி தெரிவித்தார்.

# சாஹிரா 2002 குழுவின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ருஸைக் பாரூக்



கொழும்பு சாஹிரா கல்லூரி 2002 ஆம் ஆண்டு குழு ஏற்பாடு செய்த குழு உறுப்பினர்களிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ரியல் கிங்ஸ் அணி வெற்றியீட்டியது.

கொழும்பு சிறைச்சாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பியுச்சர் போர்ஸ் அணியையே ரியல் கிங்ஸ் தோற்கடித்தது. இந்தப் போட்டியில் மொத்தம் எட்டு அணிகள் பங்குபற்றின.

சம்பியன் அணியின் தலைவர் அசார் சலாஹுதீன், 2002 குழுவின் செயலாளர் ரிஸ்வான் சலீமிடம் இருந்து சம்பியன் விருதைப் பெற்றார்.

குழுவின் தலைவர் அபாப் அன்சார், செயலாளர் ரிஸ்வான் சலீம், முன்னாள் தலைவர்கள் இஷாம் ஹுசைன், அஸ்ஹர் சலாஹுதீன், ஷிராஸ் ஹமீத், ரூமி பார்ட் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# இங்கிலாந்து ஸ்திரமான நிலையில்



ஜோ ரூட் மற்றும் ஹரி ப்ரூக்கின் அபார சதங்களுடன் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் தனது முதல் இன்னிங்ஸை ஆடிவரும் இங்கிலாந்து அணி ஸ்திரமான நிலையை பெற்றுள்ளது.

வெலிங்டனில் நேற்று ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. இதன்படி வந்த இங்கிலாந்து அணி 21 ஓட்டங்களுக்கே முதல் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

சக் கிரோலி 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த நிலையில் பென் டெக்கட் 9 ஓட்டங்களுடனும் ஒலி பொபே 10 ஓட்டங்களுடனும் வந்த வேகத்தில் வெளியேறினர். இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்கு இணைந்த ஜோ ரூட் மற்றும் ப்ரூக்கி இருவரும் நாள் முழுவதும் களத்தில் இருந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 294 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

மழை குறுக்கிட்டதால் முதல் நாள் ஆட்டம் 65 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகளை இழந்து 315 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஜோ ரூட் 182 பந்துகளில் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்றார். இரட்டைச் சதத்தை நெருங்கி இருக்கும் ப்ரூக்கி 169 பந்துகளில் 24 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 184 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

நியூசிலாந்து அணி சார்பில் பந்துவீச்சில் மட் ஹென்ரி 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு டிம் சௌதி ஒரு விக்கெட்டை பதம்பார்த்தார்.

ஏற்கனவே இங்கிலாந்து அணி முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டிய நிலையில் தொடரை கைப்பற்ற இந்தப் போட்டியை சமநிலை செய்தாலே போதுமானது. இன்று (25) போட்டியின் இரண்டாவது நாளாகும்.

# சர்வதேச கால்பந்திலிருந்து செர்ஜியோ ராமோஸ் ஓய்வு




ஸ்பேயின் பின்கள வீரர் செர்ஜியோ ராமோஸ் சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். ஸ்பெயின் அணியின் புதிய பயிற்சியாளர் லுவிஸ் லா புவன்டே எதிர்கால திட்டத்தில் தம்மை சேர்க்கவில்லை என்று கூறியதாக அவர் தெரிவித்துள்ளார்.

பரிஸ் செயிண்ட் ஜெர்மைன் அணிக்காக ஆடும் 36 வயதான ராமோஸ் 2010 உலகக் கிண்ணத்தை வென்றதோடு ஸ்பெயின் அணியுடன் இணைந்து 2008 மற்றும் 2012 ஐரோப்பிய கிண்ணங்களையும் வென்றார். அவர் ஸ்பெயின் அணிக்காக கடைசியாக 2021 மார்ச் மாதத்தில் விளையாடினார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் 37 வயதை எட்டும் ராமோஸ் சமூக ஊடகத்தில் திறந்த கடிதம் ஒன்றை வெளியிட்டு, புதிய பயிற்சியாளர் தம்மை கட்டாயப்படுத்தியதாக சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

“தற்போதைய பயிற்சியாளரிடம் இருந்து எனக்கு அழைப்பு ஒன்று வந்தது. என்ன திறமையை வெளிப்படுத்தியபோதும் அல்லது எனது கால்பந்து வாழ்வை நான் எவ்வாறு முன்னெடுத்தபோதும் என்னை கருத்தில் கொள்ளப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார். மிக வேதனையுடன் எனது பயணத்தை முடித்துக் கொள்கிறேன்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஸ்பெயின் அணிக்காக 180 போட்டிகளில் விளையாடி இருக்கும் ராமோஸ் அந்நாட்டுக்காக அதிக போட்டிகளில் ஆடிய வீரராக சாதனை படைத்துள்ளார்.

காயத்தில் இருந்து மீண்டிருந்தபோதும் 2022 கட்டார் உலகக் கிண்ணத்திற்காக அவர் தேசிய அணிக்கு அழைக்கப்படவில்லை. உலகக் கிண்ணத்தில் 16 அணிகள் சுற்றில் மொரோக்கோவிடம் தோற்று ஸ்பெயின் வெளியேறி இருந்தது.